# உதயன்

## 194 பேர் சாவு

கொழும்பு, செப். 1
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 9 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. நேற்று 13

சுடர் : 36 கதிர் : 277 | புதன்கிழமை | ஆவணி 16 ஆம் நாள் 01 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## முடக்கப்பட்ட ஒரு வாரத்தில்

# குடாநாட்டில் 36 பேர் சாவு

# 2,000 பேருக்குத் தொற்று

## நிலைமை மோசம்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 1
நாடு முடக்கப்பட்டிருந்த கடந்த ஒரு வாரத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மாத்திரம் 2 ஆயிரத்து 4 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் தொற்றால் 36 பேர் உயிரிழந்துள்ளனர். குடாநாட்டின் நிலைமை மிக மோசமாகச் செல்வதையே இந்தத் தரவுகள் வெளிப்படுத்துவதாக சுகாதாரத்துறையினர் சுட்டிக்காட்டுகின்றனர். 15

## இலங்கைக்கு கிடைக்கிறது ஒரு பில்லியன் டொலர் நிதி

கொழும்பு, செப். 1
ஆயிரத்து 237 மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கைக்கு கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுவதால், இலங்கையின் இருப்புக்கள் பலப்படுத் 13

### கைதடி

## முதியோர் இல்லத்தினுள் ஊடுருவியது கொரோனா

*43 பேர் தொற்றுடன் அடையாளம்*

யாழ்ப்பாணம், செப். 1
கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள 41 முதியவர்கள் மற்றும் 2 பணியாளர்களுக்கு கொரோனாத் தொற்று நேற்று 13

## ஊரடங்கு நீடிப்புத் தொடர்பில் அரசு கண்ணாமூச்சி ஆட்டம்

கொழும்பு, செப். 1
செப்ரெம்பர் 6 ஆம் திகதிக்கு பிறகும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை நீடிப்பதா அல்லது தளர்த்துவதா என்பது தொடர்பில் அமைச்சரவைக்கூட்டத்தில் எதுவும் ஆராயப்படவில்லை. எனினும், சுகாதார தரப்புகளின் ஆலோசனையின் பிரகாரமே 15

## அரச வேலைக்கான ஆட்சேர்ப்பு, அபிவிருத்தித் திட்டங்கள் நிறுத்தம்

*செலவீனங்களை மட்டுப்படுத்தவும் அரசு முடிவு*

கொழும்பு, செப். 1
அரசு கடும் நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் அரச செலவீனங்களை மட்டுப்படுத்துவதற்கும் இறுக்கமான நிதி முகாமைத்துவ முறைமையைக் கையாள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச 15

## பாணின் விலை யாழில் அதிகரிப்பு

*பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவிப்பு*

| பேக்கரி உற்பத்திப் பொருள்கள் | நடைமுறையிலுள்ள ஆகக் கூடிய சில்லறை விற்பனை விலை |
| --- | --- |
| ரீ பணிஸ் (ஒரு சோடி) | 40.00 |
| பேஸ்ரி | 40.00 |
| கிறீம் பணிஸ் | 50.00 |
| கொம்பு பணிஸ் | 40.00 |
| சங்கிலி பணிஸ் | 40.00 |
| ஜாம் பணிஸ் | 40.00 |
| கறி பணிஸ் | 40.00 |
| முக்கோண பணிஸ் | 40.00 |
| அடைக் கேக் | 30.00 |

யாழ்ப்பாணம், செப். 1
யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பாணின் விலை 70 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட பேக்கரி உரிமை 13

## ஒன்றரை வயது பாலகனை காவு வாங்கியது சுவர்

*வவுனியாவில் துயரம்*



வவுனியா, செப். 1
ஆட்டுக்கொட்டகைக்கு அமைக்கப்பட்ட சுவர் இடிந்து வீழ்ந்ததில் ஒன்றரை வயதுப் பாலகன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான். நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற 15

## 100 வயது முதியவர் உட்பட வடக்கில் 16 பேர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 1
யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் தலா 6 பேரும், வவுனியாவில் 4 பேருமாக கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட 16 பேர் நேற்று உயிரிழந்துள்ளனர். இதேவேளை வவுனியா 15

## கொரோனாத் தொற்றாளர்களுக்கான மருந்து இறக்குமதிக்கு அனுமதி

கொழும்பு, செப். 1
கொரோனா நோயாளிகளுக்கு 'ரீகன் கோவ்' என்ற மருந்தை இறக்குமதி செய்ய சுகாதார அமைச்சின் மருந்து வல்லுநர் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது. 15

## கோத்தாவின் பதவியேற்பு நினைவாக விகாரைகளுக்கு புத்தர் சிலை வழங்குக

*வடக்கு மாகாணத்தில் இப்படியொரு உத்தரவு*

யாழ்ப்பாணம், செப். 1
ஜனாதிபதியின் பதவியேற்பு நினைவாக வட மாகாணத்திலுள்ள விகாரைகளுக்கு புத்தர் சிலைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த விடயத்தை யாழ்ப்பாணம், பருத்தித்துறை, 15

## நாட்டில் அவசரகால நிலைமை பிரகடனம்

*கூட்டமைப்பு கண்டனம்*

கொழும்பு, செப். 1
நாட்டின் உணவு விநியோகத்தை அத்தியாவசிய சட்டமாகக் கையாள்வதாகக் கூறி அவசரகால நிலைமையை 15

## கடற்றொழிலுக்குச் சென்ற 2 மீனவர்களைக் காணோம்!

யாழ்ப்பாணம், செப். 1
வல்வெட்டித்துறை ஆதிகோயிலடியைச் சேர்ந்த 2 மீனவர்கள் நேற்றுமுன்தினம் கடற்றொழிலுக்குச் சென்றிருந்த நிலையில் நேற்று இரவு வரையில் அவர்கள் கரை திரும்பவில்லை. அவர்களது வலைகள் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

### இந்திய மீனவர்களின் அத்துமீறல்

# துண்டுதுண்டாக அறுக்கப்பட்ட வலையை தீயிட்டு எரித்தார் பருத்தித்துறை மீனவர்

**யாழ்ப்பாணம், செப். 1**

**எல்லை தாண்டிய இந்திய இழுவைப் படகுகளால் தொடர் பாதிப்புக்குள்ளான மீனவர் தனது எஞ்சிய வலைகளை தீயிட்டு கொளுத்திய சம்பவம் பருத்தித்துறை முனைப் பகுதியில் நேற்று பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

வடமராட்சி கடற்பிரதேசத்தில் எல்லை தாண்டிய இந்திய மீனவர்களால், இலங்கை மீனவர்கள் தமது பல இலட்சம் பெறுமதியான வலைகளை நாளாந்தம் இழந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையிலேயே பருத்தித்துறை முனைப்பகுதி மீனவர் இந்திய இழுவைமடிப் படகால் தனது பத்து இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான வலைகளை இழந்துள்ளார்.

கரை திரும்பிய மீனவர், மன விரக்தியுற்ற நிலையில், இனிமேல் கடற்றொழிலில் ஈடுபட முடியாத நிலையில் தனது எஞ்சிய வலைகளை பெற்றோல் ஊற்றித் தீயிட்டுள்ளார்.

இது தொடர்பில் கருத்துக்களை தெரிவித்த மீனவர் சங்கப் பிரதிநிதிகள், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸிடம் பல தடவைகள் முறையீடு செய்தும் எந்தவித பயனும் கிடைக்கவில்லை என்று ஆதங்கம் வெளியிட்டனர். (ஒ.இ)

## வல்வை. நகரசபை ஆட்சியை தக்க வைக்குமா கூட்டமைப்பு?

### தவிசாளர் தெரிவு நாளை

யாழ்ப்பாணம், செப். 1

வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் தெரிவு நாளை 10 மணிக்கு நகரசபைக்குரிய மண்டபத்தில் சுகாதார நடைமுறைகளுக்கு உட்பட்டு நடத்தப்படும் என்று வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவரான, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் கோணலிங்கம் கருணானந்தராசா கொரோனாத் தொற்றால் உயிரிழந்தார். அதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு நாளை வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் இடம்பெறவுள்ளது. வல்வெட்டித்துறை நகரசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 7 ஆசனங்களைக் கொண்டுள்ளது. சுயேச்சைக் குழு 4 ஆசனங்களையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஈபிடிபி என்பன தலா 2 ஆசனங்களையும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன தலா ஓர் ஆசனத்தையும் கொண்டுள்ளன.

இங்கு அறுதிப் பெரும்பான்மை பெற கூட்டமைப்புக்கு 2 உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

சுயேச்சைக் குழு இம்முறை தமது சார்பில் ஒருவரை முன்மொழியலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், இந்த மூன்று தரப்புகளும் இணைந்தாலும் கூட, 7 ஆசனங்களைத்தான் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இதேவேளை, தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ரெலோ கட்சியின் எம்.கே.சிவாஜிலிங்கம் பிரிந்து தனிக்கட்சி ஆரம்பித்ததால் அவரது சார்பு உறுப்பினர்களின் நிலைப்பாடு தொடர்பில் பற்றித் தெரியவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.26)

## ரூ. 2 ஆயிரம் போதாதுதான் அரசுக்கும் வேறு வழியில்லை

கொழும்பு, செப். 1

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபா நிவாரணத் தொகை அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இது பொதுமக்களுக்கு போதுமான தொகை இல்லை என்பதை அரசு நன்கு உணர்ந்துள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில், 2ஆயிரம் ரூபாவுக்கு மேல் வழங்க முடியாது. கொரோனா இரண்டாவது அலையின் போது பொதுமக்களுக்கு 5ஆயிரம் ரூபா நிவாரணத்தொகை வழங்கப்பட்டது. இதற்காக சுமார் 80 பில்லியன் ரூபா வரை அரசுக்கு செலவானது. தொடர்ந்து இவ்வாறான நிவாரணங்களை வழங்குவதற்கு நாட்டின் பொருளாதாரம் சீராக இல்லை- என்றார். (ஒ.இ)

## முதியோர் கொடுப்பனவு இன்று வழங்கப்படும்

கொழும்பு, செப். 1

ஓகஸ்ட் மாதத்துக்கான பொது உதவிக் கொடுப்பனவுகள், முதியோர் கொடுப்பனவுகள் இன்று மற்றும் நாளை வழங்கப்படும் என தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

தபால் அலுவலகங்கள் மற்றும் உப தபால் அலுவலகங்கள் சம்பந்தப்பட்ட இரண்டு நாள்களில் திறந்திருக்கும். கொடுப்பனவுகளைப் பெறுவதில் சுகாதாரப் பாதுகாப்புகளை பின்பற்றுமாறு தபால் தலைமையகம் பொதுமக்களைக் கேட்டுள்ளது. (ஒ.இ)

## மீண்டும் சரியும் ரூபா

கொழும்பு, செப். 1

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மீண்டும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின்படி இந்த விடயம் தெரியவந்துள்ளது. அமெரிக்க டொலரொன்றின் விற்பனை விலை 204.89 ரூபாவாக அதிகரித்துள்ளதாக தெரியவருகிறது.

ஆனால் கறுப்புச் சந்தைகளில் 230 ரூபா வரையில் விற்பனை விலை காணப்படுகின்றது. (ஒ.இ)



## அரசின் தீர்வைத் தூக்கி கடாசினர் ஆசிரியர்கள்

கொழும்பு, செப். 1

2022 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்க்கும் அமைச்சரவை உபகுழுவின் பரிந்துரைகளை இணைக்கும் வரை 2018 ஆம் ஆண்டில் தேசிய சம்பள ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளை ரூ. 5ஆயிரம் கொடுப்பனவு வழங்குவதற்கான அரசின் முடிவை ஏற்றுக்கொள்ள முடியாது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கூறியுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், ஆசிரியர், அதிபர்கள் போராட்டம் தொடரும். அனைத்து தொழிற்சங்கங்களுடன் கூட்டாக கலந்துரையாடி எதிர்கால நடவடிக்கை குறித்து முடிவு செய்வோம். தொழிற்சங்கங்கள் எந்தவொரு கட்டாயத் தீர்வுகளையும் ஏற்காது என்பதை வலியுறுத்திய அவர், இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க அரசுக்கு அதிக நேரம் வழங்கப்படும்- என்றார். (ஒ.இ)

# இடருக்கு மத்தியில் பணியாற்றும் சுகாதாரப் பணியாளர்கள் மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், செப். 1

கொரோனாப் பெருந்தொற்றுக்கு மத்தியில் பணிபுரியும் சுகாதாரப் பணியாளர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு, தியாகி அறக்கொடை நிறுவனத்தின் நிறுவுநரின் நிதிப் பங்களிப்புடன் இராணுவத்தினரால் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பலாலி படைத்தலைமையகம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொரோனாப் பரவலை நாட்டிலிருந்து ஒழிப்பதற்காகவும் அதனை [illegible] பாடுபடும் அனைத்துத் துறையினரை விடவும் மருத்துவப் பிரிவினர் மற்றும் சுகாதாரப் பிரிவினரும் முன்னெப்போதும் இல்லாதவாறு மிகப்பெரும் பணிச்சுமை மற்றும் மன அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ள நிலையில் அவர்களை ஊக்கப்படுத்தும் முகமாக யாழ்ப்பாணப் பிரதேசத்தினுள் சேவைபுரிகின்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்களினது சேவையைப் பாராட்டி ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது.

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் நிறுவுநரும் தலைவருமான வாமதேவன் தியாகேந்திரனுடைய பூரண நிதியனுசரணையின் கீழ் யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகம் மற்றும் 512 ஆவது காலாட் படைப்பிரிவினருடைய ஏற்பாட்டின் கீழும் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் சேவை புரிகின்ற 84 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு ரூபா 5 ஆயிரமும், 276 குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3 ஆயிரமும் என்ற அடிப்படையில் பெறுமதியான ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்குகின்ற திட்டத்தின் முதலாவது கட்டமாக சுகாதாரப் பரிசோதகர்கள் 14 பேருக்கும் குடும்பநல உத்தியோகத்தர்கள் 14 பேருக்குமான ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வானது நேற்று நடைபெற்றது. (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்மயானம் பழுதானால் சடலங்கள் தேங்கும்நிலை

வவுனியா, செப். 1

**வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களை எரியூட்டும் ஒரேயொரு மின்மயானமாகக் காணப்படும், வவுனியா மின்மயானம் பழுதடைந்தால் பெருமளவு சடலங்கள் தேங்கும் அபாயம் காணப்படும் என்று வவுனியா நாகரசபை தலைவர் தேசபந்து இ.கௌதமன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், வடமாகாணத்தை பொறுத்தவரையில் கொரோனா இறப்புக்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. வவுனியாவிலும், யாழ்ப்பாணத்திலும் மாத்திரமே மின்மயானங்கள் உள்ளன. வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் கொரோனாவால் உயிரிழப்பவர்களின் சடலங்கள் வவுனியா மின் மயானத்திலேயே எரியூட்டப்படுகின்றன.

தற்போது எமது மயானம் 24 மணிநேரமும் இயங்கும் மயானமாக மாறிவிட்டது. இதனால் எமக்குப் பெரும் சவால்கள் நிறைந்துள்ளன. எனினும் எமது மக்களுக்கு திருப்தியான சேவையை வழங்க வேண்டும் என்ற காரணத்துக்காக நாம் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றோம்.

அதிகளவான சடலங்களின் வரவால் எமது மயானத்தின் வினைத்திறன் குறைந்து வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. எனவே அரசு, இந்த இடர்காலப் பகுதியில் தன்னாலான உதவிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

(ம-110)




## தொற்றால் உயிரிழப்பவர்களின் உடல்களை தகனம் செய்வதற்கான செலவை பொறுப்பேற்கும் இருவர்



வவுனியா, செப். 1

வவுனியா மாவட்டத்தில் பொருண்மியம் நலிந்த குடும்பங்களில் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் உடல்களை தகனம் செய்வதற்கான நிதியை வழங்க சமூக ஆர்வலர்கள் இருவர் முன்வந்துள்ளனர்.

கொரோனாத் தொற்றால் இறப்பவர்களின் சடலங்கள் வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள நகரசபையின் மயானத்தில் எரியூட்டப்பட்டு வருகின்றன. அவற்றை எரிப்பதற்கு நகரசபையால் 7 ஆயிரம் ரூபா கட்டணம் அறவிடப்படுகின்றது.

இந்த நிலையில் எரியூட்டுவதற்கான கட்டணத்தை செலுத்தமுடியாத நிலையில் உள்ளவர்கள் தம்மை தொடர்புகொள்ளும் பட்சத்தில் அந்தக் கட்டணத்தை நகரசபைக்கு வழங்குவதற்கு தயாராக இருப்பதாக சமூக ஆர்வலர்கள் இருவர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான உதவி தேவைப்படுபவர்கள் 0778500294, 0773525375 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-110)

# கொரோனாவால் உயிரிழப்போரை மன்னாரிலேயே எரிக்க நடவடிக்கை

## மன்னார் மாவட்டச் செயலர் தெரிவிப்பு

மன்னார், செப். 1

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை மன்னாரிலேயே எரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரானிலி டிமெல் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாவால் உயிரிழப்பவர்களை எரிப்பதற்கு என மன்னார் நகர பொது மயானத்தில் 27 மில்லியன் ரூபா செலவில் கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் கிழக்கு மாகாணத்திலுள்ள ஓட்டமாவடிக்கும், இந்து மற்றும் கிறிஸ்தவ மதங்களைச் சேர்ந்தவர்களின் சடலங்கள் வவுனியாவுக்கும் எரிப்பதற்காக எடுத்துச் செல்லப்படுகின்றன.

வவுனியாவில் சடலங்களை எரிக்கும் இடத்துக்கு தற்பொழுது முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளிலிருந்தும் சடலங்கள் வருவதால் வவுனியாவில் சடலங்களை எரியூட்டும் இடத்தில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஆகவே சடலங்களை மன்னாரிலேயே எரிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான கட்டடம் அமைப்பதற்கான நிதி உதவிகளை மன்னார் நகரசபை, பிரதேச சபைகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகளிடம் கோரப்பட்டுள்ளன.

இதற்கான அடிக்கல்லை எதிர் வரும் வாரமளவில் நடுகை செய்வதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்வது எனவும் இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார்.

(ஐ-213)



கிளிநொச்சி மாவட்டத்தில் சதொச மற்றும் அரச வங்கிகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சேவைகளை பெற்றுக் கொண்டமையைக் காணக்கூடியதாக வுள்ளது. (ஐ-113)

# தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு யாழ்.மாநகர முதல்வர் நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 1

தமிழக முதல்வராக பதவியேற்ற மு.க.ஸ்டாலின் இலங்கைத் தமிழ் அகதிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் வகையில் பல திட்டங்களை முன்மொழிந்து அதற்கான நிதியையும் ஒதுக்கி வைத்திருப்பது ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்ல உலகத்தமிழர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் தந்திருக்கின்றது என்று யாழ்ப்பாண மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

தமிழக முதல்வராக பதவியேற்ற மு.க.ஸ்டாலின் தன்னுடைய முதலாவது வரவு செலவுத் திட்டத்திலேயே இலங்கைத் தமிழ் அகதிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் வகையில் வேலை வாய்ப்புகள், கல்விக்கான உதவித்தொகைகள், மானியங்கள், வீடமைப்பு போன்ற பல திட்டங்களை முன்மொழிந்து அதற்கான நிதியையும் ஒதுக்கியுள்ளார். இதற்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு தமிழக முதல்வராக தமிழகத்தில் வாழ்கின்ற எங்களுடைய உறவுகளுக்கு உதவிக்கரம் நீட்டியது போல் எங்களுடைய நீண்டகால அரசியல் அபிலாசைகளை அடைவதற்கும் தமிழகத்தில் வாழ்கின்ற எமது உறவுகள் தமது தாய்நிலம் திரும்பி தாய்மண்ணில் மகிழ்ச்சியாக வாழக்கூடிய வகையில் எமக்கான அங்கீகாரத்தை உலகப்பந்தில் பெற்றுத்தருவதற்கும் தாங்கள் செயலாற்றவேண்டும்.

தமிழகத்தினை இந்தியாவின் முன்னிலையான மாநிலமாக மாற்றும் வகையில் முதல்வர் செயற்படுகின்ற விதம் எமக்கு மகிழ்ச்சியை அளிப்பதோடு அந்தப் பயணத்தில் வெற்றிபெற எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றுள்ளது.

(ஐ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரடங்கு தளர்வுபற்றி இன்னும் முடிவில்லை

## தொற்று, சாவு அதிகரிப்பு என்கிறார் இராணுவத் தளபதி



**கொழும்பு, செப். 1**

**நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள ஊரடங்குச் சட்டத்தை எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4 மணிக்குத் தளர்த்துவதா? அல்லது நீடிப்பதா? என்பது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், சாவுகளின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்ற நிலையில் ஊரடங்குச் சட்டத்தை தளர்த்துவது தொடர்பில் உடனே முடிவு எடுக்கமுடியாது என்று அவர் தெரிவித்தார்.

சுகாதாரப் பிரிவினருடன் இது தொடர்பில் இந்தவாரம் கலந்துரையாடப்படும் எனவும், அதன் பின்னரே இறுதிமுடிவு எடுக்கப்படும் எனவும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார். (த-22)

### வவுனியா மாவட்டத்தில்

## 2 ஆவது டோஸ் தடுப்பூசி ஏற்றும் பணிகள் 6 ஆம் திகதி ஆரம்பம்

வவுனியா,செப்.1

வவுனியா மாவட்டத்தில் இரண்டாவது டோஸ் தடுப்பூசி செலுத்தும் பணிகள் எதிர்வரும் 6 ஆம் திகதி தொடக்கம் முன்னெடுக்கப்படவுள்ளன.

தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டை சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்ப சுகாதாரப் பிரிவினரும், இராணுவத்தினரும் இணைந்து முன்னெடுக்கவுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட 98 ஆயிரம் பேருக்கு தடுப்பூசி வழங்கத் தீர்மானித்து கடந்த யூலை மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் தடுப்பூசி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை 30 வயதுக்கு மேற்பட்ட 83 ஆயிரத்து 151 பேருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நோய்த் தாக்கம் அதிகமாகவுள்ளமையால் அவர்களுக்கு முன்னுரிமையளித்து 5 ஆயிரத்து 800 பேருக்கு நடமாடும் திட்டத்தின் மூலம் இராணுவத்தினர் ஊடாக தற்போது முதலாவது டோஸ் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகின்றது..

அதனையடுத்து முதலாவது டோஸ் சினோபாம் தடுப்பூசி பெற்றுக் கொண்ட 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசிகளை எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே மக்கள் தங்கள் கிராம அலுவலர்கள் மற்றும் சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலுக்கு அமைய உரிய திகதிகளில், குறிப்பிட்ட இடங்களில் அவற்றை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஜ-110)



## மக்கள் பொறுப்புணர்ந்து நடந்துகொள்ள வேண்டும்

### அரசு கோரிக்கை

கொழும்பு, செப்.1

பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும் என்று சகலரிடமும் கேட்டுக்கொள்கின்றோம். அவ்வாறில்லை என்றால் அவர்களது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும்.

இவ்வாறு அமைச்சரவை இணைபேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண எச்சரித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஜனாதிபதி, கொவிட் கட்டுப்பாட்டு செயலணி மற்றும் சுகாதார தரப்பினர் தீர்மானங்களை எடுப்பது தொடர்பான மதிப்பீடுகளிலேயே அதிக அவதானம் செலுத்துகின்றனர்.

நாட்டு மக்களின் ஒத்துழைப்புடன் அனைவரும் ஒன்றிணைந்து தற்போதைய நிலைமையை வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்வதன் மூலம் எதிர்வரும் வாரங்களில் மரணங்கள் மற்றும் தொற்றாளர்களின் எண்ணிக்கையை குறைக்க முடியும் என்று நம்புகின்றோம்.

எனினும் மிகக் குறைந்தளவிலான மக்கள் தமது சமூகப் பொறுப்பை மறந்து செயற்படுகின்றனர். நாட்டு மக்களின் ஒத்துழைப்பு இன்றி நிலைமையை முகாமைத்துவம் செய்ய முடியாது.

பொறுப்பை உணர்ந்து செயற்படுமாறு சகலரிடமும் கேட்டுக்கொள்கின்றோம். அவ்வாறில்லை என்றால் அவர்களது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் - என்றார். (எ-இ)

## பிணங்களைச் சேகரிக்கும் அரசாக மாறியுள்ளது கோத்தாபயவின் அரசு

### சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, செப். 1

மக்களுக்கு உரிய பொறிமுறையின் கீழ் உணவுத் தேவையைக்கூட நிவர்த்தி செய்யமுடியாத இந்த அரசு, நாளாந்தம் மக்களைப் பட்டினிச் சாவுக்குள் தள்ளி பிணங்களைச் சேகரிக்கும் அரசாகவே மாறியுள்ளது - என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன். கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தி யாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மருத்துவ சங்கங்கள், உலக சுகாதார தாபனம் என்பன ஊரடங்கை இன்னும் நீடிக்குமாறு கோருகின்றன. ஆனால், தற்போதைய ஊரடங்கு நிலையிலே கூட மக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் உணவுத்தேவையை ஒழுங்கமைத்து வழங்கக்கூடிய வினைத்திறனற்ற அரசாங்கமாக இந்த அரசாங்கம் காணப்படுகின்றது.

இலங்கையின் நாளாந்த இறப்புக்கள் 200இனைத் தாண்டியுள்ளது. மரணங்கள் இவ்வாறு இருக்கும்போது உயிரா, பொருளாதாரமா என்ற விடயம் முக்கியம் பெறுகிறது. ஆனால், மக்களின் உயிரை விட பொருளாதாரம்தான் இந்த அரசுக்கு முக்கியமாகப்படுகின்றது. போரைப்போல கொரோனாவையும் வெற்றிகொள்வோம் என்று அரசு தெரிவித்தது. இவ்வாறான மெத்தனப் போக்குகள்தான் இந்தப் பேரிழப்புக்குக் காரணம்- என்றார். (ம-113)

## கொரோனாத் தொற்று விழிப்புணர்வுச் செயற்பாடு

கிளிநொச்சி,செப்.1

கொரோனாத் தொற்றுத் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாட்டில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை ஈடுபட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் கூடுதலான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து விழிப்புணர்வு நடவடிக்கையை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை முன்னெடுத்துள்ளது.

கொரோனாத் தொற்றில் இருந்து மக்கள் தங்களை தற்காத்துக் கொள்வதற்கு முகக்கவசம் அணிதல், அடிக்கடி கைகழுவுதல், வீட்டிலேயே இயன்றவரை இருத்தல், சமூக இடைவெளி பேணுதல், இருமும் போதும் தும்மும்போதும் மற்றவர்களிடம் இருந்து விலகி இருத்தல் போன்ற நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடித்தல், திருமண வீடுகள் மற்றும் கொண்டாட்டங்களுக்கு செல்வதைத் தவிர்த்துக்கொள்ளல் உள்ளிட்ட விதிகளைப் பின்பற்றுமாறும், தனிமனித பாதுகாப்பு ஒவ்வொருவருடைய கைகளிலேயே தங்கியுள்ளது என்றும் பிரதேச சபையினர் முன்னெடுத்துள்ள விழிப்புணர்வுச் செயற்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-13)

## வயல்நிலங்களை முழுமையாக விடுவிக்குமாறு பூநகரி ஜெயபுரம் மக்கள் கோரிக்கை

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக போராட்டங்கள் நடத்தப்பட்டும் வயல் நிலங்களை முழுமையாக பெற்றுக் கொள்ள முடியவில்லை என்று பூநகரி ஜெயபுரம் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

கிளிநொச்சி ஜெயபுரத்தில் தென்னிலங்கையில் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென 1983 ஆம் ஆண்டில் ஜெயபுரம் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டது. மேட்டுக் காணிகள் வழங்கப்பட்டாலும் எதிர்காலத்தில் வயல் நிலங்கள் வழங்கப்படும் என குடியேற்றக் காலத்தில் ஜெயபுரம் மக்களுக்கு வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. போர்ச் சூழல் காரணமாக வயல் நிலங்கள் துப்புரவு செய்யப்படவில்லை.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஜெயபுரம் மக்கள் தேவன்குளத்தின் கீழுள்ள 550 ஏக்கர் வயல் நிலங்களைத் துப்புரவு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டபோது வனவளத் திணைக்களம் அதற்கு தடை விதித்தது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், பிரதமர், ஜனாதிபதி வரை மனு மூலமும் நேரிலும் வயல் நிலம் விடுவிக்கப்பட வேண்டும் என கடந்த பத்தாண்டுகளாக கோரிக்கை விடுத்து வரும் நிலையில் 550 ஏக்கரில் 130 ஏக்கர் மட்டும் விடுவிக்கப்பட்டுள்ளது.

ஜெயபுரம் கிராமத்தில் 700 குடும்பங்கள் தற்போது வாழ்ந்து வரும் நிலையில் வயல் நிலங்கள் முழுமையாக விடுவிக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் - என்றனர். (ஜ-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உவர் நீர் பரம்பலால்

# காணாமல் போயுள்ள குஞ்சுக்குளம் கிராமம்

**கிளிநொச்சி, செப். 1**

**பாரம்பரியமாக விவசாயம் செய்யப்பட்டு வந்த குஞ்சுக் குளம் கிராமத்தில், உவர் நீர் பரம்பல் அடைந்ததன் காரணமாக அங்கிருந்த மக்கள் இடம்பெயர்ந்து வெளியிடங்களுக்கு சென்றதால் அந்தக் கிராமமே காணாமல் போயுள்ளது.**

பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த குஞ்சுக்குளம் கிராமத்தில் பாடசாலைகள், உப தபால் நிலையங்கள், வீடுகள், கிணறுகள் 500 ஏக்கருக்கு மேல் விவசாய நிலங்கள் மற்றும் கோவில்கள் என பல உவர் நீரின் தாக்கத்தால் தரைமட்டமாக தாணப்படுகின்றன. இதனால் குஞ்சுக்குளம் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் பல வருடங்களாக சோலை கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் கருத்து தெரிவித்ததாவது:

எமது கிராமத்துக்கு மண்டைக்கல்லாறு பகுதியிலிருந்து வருகின்ற நீரினால் விவசாய நிலங்கள் முழுவதும் உவர் நிலமாக மாறி வருகிறது.

இது தொடர்பில் அரச அதிகாரிகள், அரசியல்வாதிகளிடம் பலமுறை தெரிவித்தபோதும் எந்தப் பயனும் இல்லை. தேர்தல் காலங்களில் மட்டும் வருவார்கள் உங்கள் கிராமத்துக்கு அனைத்து விடயங்களையும் செய்து தரலாம் என்ற போலி வாக்குறுதியை மட்டும் தருவார்கள். இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இறக்குமதியை நிறுத்தி எமது நிலங்களில் விவசாயத்தை மேற்கொள்ளுங்கள் என்று அரசாங்கம் சொல்கிறது. எமது நிலத்தில் எங்களுக்கு விவசாயத்தை மேற்கொள்ள விருப்பம்தான். நிலமிருந்தும் விவசாயத்தை மேற்கொள்ள முடியாமல் இருக்கின்றோம்.

எனவே எமது குஞ்சுக்குளம் கிராமத்தை பாதுகாக்க உவர் நீர் தடுப்பணை அமைத்துத் தாருங்கள் என்று கோரிக்கை விடுகின்றோம் - என்றனர். (ஐ-113)

## விடுதலை உணர்வுகளை சிதைக்கவே போதைகள்

*குற்றஞ் சாட்டுகின்றார் சட்டத்தரணி சுகாஸ்*

யாழ்ப்பாணம், செப். 1

தமிழர் தாயகத்தை சிதைத்து எதிர்கால சந்ததியினுடைய விடுதலை உணர்வை உருக்குலைய வைப்பதற்காக அரசினுடைய மறைமுக அல்லது நேரடி ஆதரவோடு, போதைப் பொருள்கள் குவிக்கப்படுகின்றனவா? என்ற சந்தேகம் ஏற்படுகிறது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகரும், சட்டத்தரணியுமான கனகரத்தினம் சுகாஸ் தெரிவித்தார்.

இலங்கையில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. அதிக போதைப்பொருள் தமிழர் பகுதிகளை இலக்கு வைத்து இலங்கை கடற்படையின் பாதுகாப்பை மீறி எவ்வாறு கடத்தி வரப்படுகின்றது? இதன் பின்னணி என்னவாக இருக்கும்? என்பது தொடர்பாக வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

'உண்மையில் இது ஆழமாக ஆராயப்பட வேண்டியதொரு விடயம். ஏனென்றால், இலங்கை அரசினுடைய கடற்படை, கடந்த காலத்தில் மிகமிக வலுவாக, இறுக்கமாகச் செயற்பட்டதாகக் கூறப்பட்டது. விடுதலைப் புலிகளினுடைய கடற் போக்குவரத்தையும், அவர்கள் கடலினூடாக ஆயுதங்களை கொண்டு வந்ததையும், இலங்கை கடற்படை முறியடித்தது என்று இலங்கை அரசு பெருமையோடு மார்தட்டியது.

விடுதலை புலிகள் ஆயுதங்களை கொண்டு வருவதை இலங்கைக் கடற்படை முறியடித்தது உண்மை என்றால், ஆயுதம் ஏந்தாத நபர்கள் போதைப் பொருள்களை இலங்கைக்குள் கடத்துவதை இலங்கை கடற்படையால் இலகுவாக முறியடிக்க முடியும். ஆனால் அதையும் தாண்டி போதைப் பொருள்கள் கடத்தப்பட்டு இலகுவாக கொண்டு வரப்படுகின்றது என்றால், இங்கே சில கேள்விகள் எங்களுக்கு எழுகின்றன.

முதலாவது, போதைப் பொருள் கடத்தல்காரர்கள் இலங்கைக் கடற்படையின் பாதுகாப்பை முறியடித்து கடத்துகிறார்களா?

இரண்டாவது, இலங்கைக் கடற்படை தனது கடற்பரப்பை பாதுகாக்கின்ற திறனை இழந்து விட்டதா?

மூன்றாவது, இலங்கைக் கடற்படையின் மறைமுக அனுமதியோடுதான், போதைப் பொருள்கள், தமிழர் தாயகப் பிரதேசத்துக்குள் கடத்தப்படுகின்றனவா?

தமிழர் தாயகத்தை சிதைத்து எதிர்கால சந்ததியினுடைய விடுதலை உணர்வை தமிழ் தேசம் பற்றிய உணர்வுகளை சிதைப்பதற்காக, தமிழ் மக்களினுடைய எதிர்கால சந்ததியை அழிப்பதற்காக தமிழர் தாயகத்தை இலக்கு வைத்து அரசினுடைய மறைமுக அல்லது நேரடி ஆதரவோடு, போதைப் பொருள்கள் வடக்கு, கிழக்குக்குள் குவிக்கப்படுகின்றதா? என்ற சந்தேகமும் ஏற்படுகிறது. எங்களின் சந்தேகங்கள் நியாயமானவை - என்றார். (ம-110)



## முக்கொம்பன் கிராமத்துக்கான பஸ் சேவையை ஏற்படுத்தவும்

*அப்பகுதி மக்கள் கோரிக்கை*

கிளிநொச்சி, செப். 1

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்துக்கும் முக்கொம்பனுக்கும் இடையிலான வீதியை தற்காலிகமாக சீரமைத்து பஸ்சேவையை விரைவில் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை பாதை சீரின்மை காரணமாக இடைநிறுத்தப்பட்டது.


இது தொடர்பாக மாதர் சங்கத்தினர் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி முகாமையாளரை சந்தித்த போது குறித்த வீதியில் இரண்டுக்கு மேற்பட்ட இடங்களில் குழிகள் காணப்படுகின்றன. நிரந்தரமாக வீதியைச் சீரமைப்பதற்கு முன்னர் குறித்த குழிகளை மூடுவதன் மூலம் பஸ் சேவையை நடத்த முடியும் என தெரிவித்துள்ளார்.

600க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற முக்கொம்பன் கிராமத்துக்கு ஊரடங்குக்கு முன்னரே பஸ் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதன் காரணமாக போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளோம். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ஐ-13)

## ஆறுமுகத்தான்குளம் கிராமத்தில் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு

*கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சுட்டிக்காட்டு*

முல்லைத்தீவு, செப். 1



முல்லைத்தீவு ஆறுமுகத்தான் குளம் கிராமத்தில் மரக்கறிகளுக்கு மட்டுமல்ல உணவுப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் உ.றனிஸ்லா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது

ஆறுமுகத்தான்குளம் கிராமத்தில் 110 வரையான குடும்பங்கள் வாழ்கின்றன. இக்கிராம மக்களுக்கு வயல் நிலம் இல்லாததன் காரணமாக நெல் போன்ற உணவுப் பொருள்களை சேமிப்பில் வைக்கக் கூடிய நிலைமை இல்லை. இந்தக் கிராமத்தில் இரு கடைகள்தான் உள்ளன. அந்தக் கடைகளால் கிராம மக்களின் முழுமையான உணவுத் தேவைகளை நிறைவு செய்ய முடியாது. ஊரடங்கு நேரத்தில் ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் உள்ள குமுழமுனைக்கும் செல்ல முடியாது. இந்த நிலையில் நடமாடும் உணவுப் பொருள்களின் விற்பனை வாகனங்களை ஆறுமுகத்தான் குளம் கிராமத்துக்கு அனுப்பிவைக்குமாறு அதிகாரிகளிடம் கோரியுள்ளோம். என்றார். (ஐ-13)



## 60 குடும்பங்களுக்கு பல்வேறு உதவிகள்

முல்லைத்தீவு,செப்.1

முல்லைத்தீவு மாவட்டத்தில் 60 குடும்பங்களுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன. முல்லைத்தீவு மாவட்டத்தில் மாமூலை,முள்ளியவளை 3ஆம் வட்டாரம், ஐயனார் குடியிருப்பு மற்றும் வற்றாப்பளை பகுதியைச் சேர்ந்த மக்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

30 வயோதிபர்களுக்கு உலர் உணவுப்பொதிகள்,20 வயோதிபர்களுக்கு உடைகள்,தந்தையை இழந்து தாயாரின் அரவணைப்பில் உள்ள 10 மாணவர்களுக்கான நிதி வைப்பிலிடப்பட்டு வங்கிப்புத்தகங்கள் என்பன வழங்கப்பட்டன. புஸ்பராசா நற்பணி மன்றம் ஊடாக இந்த உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் தீர்வுத்திட்டத்துக்கு ஆசிரியர்கள் ஒத்துழைப்பர்

## நம்பிக்கை வெளியிடுகிறது அரசு



**கொழும்பு, செப். 1**

**அதிபர், ஆசிரியர் சேவைகளில் காணப்படும் சம்பளப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் அரசால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டத்துக்கு அதிபர் மற்றும் ஆசிரியர்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என நம்புகின்றோம் என்று கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.**

ஆசிரியர்களுக்கு இரு மாதங்களுக்கு 5 ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவை வழங்குவதற்கும், 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக நிலையான தீர்வை நோக்கி பயணிப்பதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. அதில் அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் அமைச்சரவையில் எட்டப்பட்ட தீர்வு தொடர்பில் கல்வி அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அதிபர், ஆசிரியர் சேவைகளில் காணப்படும் சம்பளப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அமைச்சரவையால், அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் முன்வைக்கப்படும். அதில் மேற்படி பிரச்சினைக்கான தீர்வுத் திட்டங்கள் உள்ளடக்கப்படும்.

அதுவரை செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்களுக்கு ஆசிரியர் சமூகத்துக்கு விசேட மேலதிக கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும். (இரு மாதங்களுக்கு மட்டும்) அமைச்சரவை உப செயற்குழு மூலம் அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்காக, மேலும் சில பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றையும் கட்டங்கட்டமாக நடைமுறைப்படுத்துவோம்.

மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கையை ஆசிரியர்கள் ஆரம்பிப்பார்கள் என நம்புகின்றோம். -என்றார்.

அதேவேளை, 5,000 ரூபா கொடுப்பனவுத் திட்டத்தை ஆசிரியர்கள் நிராகரித்துள்ளனர்.

சுபோதினி குழுவின் பரிந்துரையின் பிரகாரம் தீர்வு வேண்டும் என வலியுறுத்துகின்றனர். அப்படியானால் அரசு என்ன செய்யப்போகின்றது என அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

மாணவர்களின் எதிர்காலம், அவர்களுக்கான கல்வித் திட்டம் உள்ளிட்ட விடயங்களைக்கருதி அரசின் தீர்வுக்கு ஆசிரியர்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என நம்புகின்றோம். வழங்கப்பட்டுள்ள உறுதிமொழிகளை பொறுப்பு வாய்ந்த அரசு என்ற அடிப்படையில் நாம் நிச்சயம் நிறைவேற்றுவோம். 24 ஆண்டு காலம் இந்தப் பிரச்சினை நீடிக்கின்றது. இதற்கு நிலையானதொரு தீர்வை நோக்கி பயணிப்பதே எமது எதிர்பார்ப்பாகும் என்று கல்வி அமைச்சர் பதிலளித்தார். (எ-44)

# சீனிக் கொள்கலன்களை விடுவிப்பதற்கு முடிவு!

கொழும்பு, செப். 1

துறைமுகத்தில் தேங்கியுள்ள 2187 மெற்றிக்தொன் சீனி அடங்கியுள்ள 81 கொள்கலன்களை கட்டணமில்லாமல் விடுவிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

டொலர் பெறுமதி அதிகரித்துள்ளதால் அத்தியாவசிய பொருள்களை இறக்குமதி செய்யும் போது இறக்குமதியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு அமைச்சரவை மட்டத்தில் தீர்வு காண எதிர்பார்க்கப்பட்டுள்ளது என துறைமுக மற்றும் கப்பற்துறை அபிவிருத்தி அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இவற்றை சதொச விற்பனை நிலையத்தின் ஊடாக மானிய விலையின் அடிப்படையில் விநியோகிக்க உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தாக்கத்தால் அரசும், நாட்டு மக்களும் பல நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள வேளையில் ஒரு சில மாபியாக்கள் அத்தியாவசிய பொருள்களை பதுக்கி வைத்து. அந்தப் பொருள்களுக்கான கேள்வியை சந்தையில் அதிகரிக்க வைத்து அதிக இலாபம் எடுக்கிறார்கள். சீனியின் விற்பனை விலையும் இவ்வாறே அதிகரித்துள்ளது. -என்றுள்ளது. (எ-இ)


# அத்தியாவசிய உணவு வழங்கலுக்கு அவசரகால விதிகளுடன் வர்த்தமானி

கொழும்பு, செப். 1

நாடளாவிய ரீதியில் நடைமுறையாகும் வகையில் அத்தியாவசிய உணவுப்பொருள் விநியோகத்துக்கான அவசரகால விதிமுறைகள் அடங்கிய அதிவிசேட வர்த்தமானி ஜனாதிபதியால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அரசின் உத்தரவாத விலைக்கு அல்லது சுங்கத்தில் இறக்குமதி செய்யப்பட்ட விலையை அடிப்படையாகக் கொண்டு நெல், அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப்பொருள்களை மொத்தமாகக் கொள்வனவு செய்து மக்களுக்கு நியாயமான விலைக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதற்கும் அரச வங்கிகளின் மூலம் மொத்தமாகக் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள கடனை, கடன் பெற்றுக்கொண்டவர்களிடம் இருந்து அறவிடப் படக்கூடிய வகையில் இது நடைமுறைப்படுத்தப் படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக, பின்னவல யானைகள் சரணாலயத்தில் யானையொன்று இரட்டைக் குட்டிகளை ஈன்றுள்ளது. (ம)

# எதிர்வரும் காலங்களில் நாட்டில் எண்ணெய்க்கும் தட்டுப்பாடு வரும்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு

மலையகம், செப். 1

எதிர்வரும் காலங்களில் எண்ணெய் தட்டுப்பாடும் வரும். அவ்வாறு வந்தால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் நான்காவது கொரோனா அலை தொடங்கியுள்ளது. இதனால் மக்கள் பெரும் சிரமத்துக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். இலங்கையினுடைய பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டாலும் கூட பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதனால் அன்றாடம் கூலித் தொழில் செய்யும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்

நாட்டில் பொருள்களின் விலைவாசி ஆகாயத்தைத் தொடுகின்ற சூழ்நிலையில் உள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாகவும். விலைவாசி அதிகரிப்பு காரணமாகவும் மக்கள் மிகவும் மோசமான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். எதிர்வரும் காலங்களில் இதற்கு மாற்று நடவடிக்கை எடுக்காவிட்டால் மக்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படும். எதிர்வரும் காலங்களில் எண்ணெய்த் தட்டுப்பாடு வரும். அவ்வாறு வந்தால் அதிலும் ஆச்சரியப்படுவதற்கில்லை -என்றார். (ஐ-இ)

# கிடைக்கும் தடுப்பூசியை உடனடியாக ஏற்றுங்கள்!

## மருத்துவ கலாநிதி சந்திம ஜீவந்தர கோரிக்கை

கொழும்பு, செப். 1

புதிய வைரஸ் திரிபுகளால் நாட்டுக்கு பிரச்சினை ஏற்படாவிட்டால் ஒக்ரோபர் இறுதியில் குறிப்பிடத்தக்க அளவு கொரோனா மரணங்கள் குறைவடையும் சாத்தியம் இருக்கின்றது என்று மருத்துவ கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை மேலும் துரிதப்படுத்தவேண்டும். கொரோனா புதிய திரிபுகள் ஏற்படுவது தொடர்பில் நாங்கள் தொடர்ந்து எச்சரிக்கை விடுத்து வருகின்றோம். வைரஸ் தொற்று தீவிரமாக பரவும் நிலையில் உலகில் பெரும்பான்மையான மக்கள் கொவிட் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளும் வரைக்கும் புதிய திரிபுகள் ஏற்படுவதை யாராலும் தடுக்க முடியாது.

30 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் செப்ரெம்பர் மாதமளவில் முழுமையடையும் என சுகாதார அமைச்சு அறிவித்திருக்கின்றது.

கிடைக்கும் தடுப்பூசியை விரைவாக பெற்றுக் கொண்டு, மக்கள் தங்களது பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். அதன் மூலமே நாட்டில் இலகுவான நிலைமையை ஏற்படுத்துவதற்கு முடியுமாக இருக்கும் -என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# வதைபடும் மக்கள்

நாட்டின் இன்றைய ஆட்சியாளர்களைத் தேர்வு செய்த மக்களும் சரி, அவர்களை நிராகரித்த மக்களும் சரி இந்த நாட்டில் தினந்தோறும் வதைக்கப்படுகின்றனர்.

கொரோனாவின் துன்பம் ஒருபுறம் என்றால் மறுபுறம் விலைவாசி உயர்வு. இரண்டுக்கும் ஈடு கொடுக்க முடியாமல் மக்கள் தினந்தோறும் துன்பப்படுகின்றனர். இலங்கையில் நடுத்தர வர்க்கத்தினரே அதிகம். அவர்கள் இப்போதைய பொருளாதாரச் சூழலுக்குத் தாக்குப் பிடித்தாலும் இதே நிலைமையில் நீண்ட காலம் தாக்குப்பிடிக்க முடியாது. வறுமைப்பட்ட மக்களைச் சொல்லத் தேவையில்லை. அவர்களை அரசும் கைவிட்ட நிலைமையே காணப்படுகின்றது.

கொரோனாத் தொற்று நாளுக்கு நாள் தீவிரமாகி வருகின்றது. தொற்றாளர்கள், அவர்களுடன் முதல் தொடர்பாளர்கள் தனிமைப்படுத்தப்படுகின்றனர். கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக தொடரும் இந்த அவலத்தால் மக்கள் சலித்து – விரக்தியுற்றுள்ளார்கள். தொற்றுத் தொடர்பில் சுய பாதுகாப்பு என்பது அருகி விட்டது.

நாட்டில் முடக்கம் அறிவிக்கப்பட்டிருந்தாலும், மக்கள் முடங்குவதற்குத் தயாரில்லை. தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள அவர்கள் முடக்கத்தை மீற வேண்டியிருக்கின்றது. இலங்கையில் கொரோனாவின் முதலாவது அலையின்போது, நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதான காலத்தில், முடக்கம் அறிவிக்கப்பட்டபோது அதனை முப்படையினரும் ஒழுங்காக நடைமுறைப்படுத்தினர். மக்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டது. தொற்றும் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

ஆனால் இப்போது முடக்கம் என்பது பெயரளவிலான ஒன்றாகவே இருக்கின்றது. பொதுவாக வார விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமைகளில் வீதிகளில் மக்கள் நடமாட்டம் எப்படி இருக்குமோ அதேபோன்றதொரு நடமாட்டம் இப்போது சர்வசாதாரணமாக இருக்கின்றது. முடக்கத்தை இறுக்கமாக நடைமுறைப் படுத்த அரசும் தயாரில்லை. மக்களும் அவ்வாறான தொரு முடக்கத்தை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை.

பொருளாதார ரீதியாக மக்கள் எதிர்கொள்ளும் அவஸ்தைகள் அவர்களை தொற்றின் வீரியத்தைத் தாண்டியும் முடக்கத்தை மீறச் செய்கின்றது.


அன்றாட வாழ்வுக்காக எந்தப் பொருள்களையும் வாங்க முடியாதளவுக்கு நாளுக்கு நாள் ஒவ்வொரு விலையில் பொருள்கள் விற்பனையாகின்றன. இதைவிட பெருமளவான பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

கடந்த காலங்களைப் போன்று மக்கள் இப்போது எல்லாவற்றும் மீண்டும் வரிசையில் நிற்கவேண்டிய நிலைமை. இதைத்தான் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்கவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

சோமாலியா, சிம்பாப்வே போன்ற நாடுகளில் மிக மோசமான பொருளாதார நிலைமையால் அங்குள்ள மக்கள் துன்பப்பட்டு துயரப்பட்டதை செய்திகளாகக் கேட்டறிந்த எமக்கு அந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. அதை விரைவில் அனுபவிக்கப்போகின்றோம்.

ஆனால் ஆட்சியாளர்களோ உங்களை மீட்க இதோ ஒரு தூதுவர் வருகிறார் அதோ ஒரு தூதுவர் வருகின்றார் என்று போக்குக்காட்டித் தங்கள் காலங்களை ஓட்டுகின்றனரே தவிர, நாட்டை மீட்கக் காத்திரமான எதனையும் செய்யவில்லை.

எல்லாவற்றுக்கும் முகம் கொடுத்து மடியப்போவது நாட்டு மக்கள்தான். அதனால்தான் ஆட்சியாளர்களுக்கு கவலை இல்லை.



# மருந்து மாபியா மூலமாக நண்பர்களுக்குச் சலுகை!

## அரசு மீது எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



**கொழும்பு, செப். 1**

**கறுப்புச் சந்தை மருந்து மாபியாவின் மூலமாக நண்பர்களுக்குச் சலுகை வழங்குவதை அரசு நிறுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேட்டுக் கொண்டுள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பி.சி.ஆர். மற்றும் ரெபிட் அன்டிஜென் பரிசோதனைகளுக்காக அரசு ஆகக்கூடிய விலைகளை நிர்ணயம்செய்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டிருந்தாலும், குறித்த வர்த்தமானி அறிவித்தலின் பின்னணியில் பெரும் மோசடி நிலவுகின்றது.

அன்டிஜென் பரிசோதனையை 600 ரூபாவுக்கும், பி.சி.ஆர். பரிசோதனையை 2 ஆயிரம் ரூபாவுக்கும் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், அன்டிஜென் பரிசோதனையை 2 ஆயிரம் ரூபாவுக்கும், பி.சி.ஆர். பரிசோதனையை 6 ஆயிரத்து 500 ரூபாவுக்கும் விலை நிர்ணயித்து அரசு வர்த்தமானி வெளியிட்டமை அர்த்தமற்றது.

பரிசோதனைப் பொருள்களை அரச மருந்துப் பொருள்கள் கூட்டுத்தாபனம் ஊடாகக் கொண்டுவந்து மக்களுக்குச் சலுகை வழங்க முடியுமாக உள்ள நிலையில், தனியார் நிறுவனங்களுக்கு இலாபமீட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே, அன்டிஜென் பரிசோதனையை 600 ரூபாவுக்கும், பி.சி.ஆர். பரிசோதனையை 2 ஆயிரம் ரூபாவுக்கும் விலை நிர்ணயம் செய்து, மீண்டும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட வேண்டும்' - என்றுள்ளது.

(த-22)

# சுகாதாரப் பணிக்குழாமினர் 6,000 பேருக்குக் கொரோனா

கொழும்பு, செப். 1

இலங்கையில் இதுவரையில் 6 ஆயிரம் சுகாதாரப் பணிக்குழாமினருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது என அரச தாதியர்கள் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதில் [illegible] மருத்துவமனையில் மாத்திரம் 250 சுகாதாரப் பணியாளர்களுக்குக்




கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(த-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றுக்குள்ளான தாய்மார் தாய்ப்பால் ஊட்ட தயங்காதீர்

## மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா அறிவுரை



**கொழும்பு, செப். 1**

**தாய்மாருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டாலும் குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டுவதை நிறுத்தக் கூடாது என கொழும்பு சீமாட்டி சிறுவர் மருத்துவமனையின் விசேட மருத்துவர் நிபுணர் தீபால் பெரேரா அறிவுரை வழங்கியுள்ளார்.**

கொரோனாத் தொற்றுக்குள்ளான தாய்மார் குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டுவது தொடர்பில் விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தாய்ப்பால் ஊடாகக் கொரோனாத் தொற்று குழந்தைகளுக்கு பரவுவதாக இதுவரை எந்தவொரு ஆய்வின் மூலமும் உறுதிப்படுத்தப்படவில்லை. அதனால் தாய்க்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டாலும் குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டுவதை நிறுத்தக்கூடாது.

தாய் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி, குழந்தைக்கு தொற்று இல்லாத நிலையிலும் தாய்ப்பால் ஊட்டுவதை மேற்கொள்ளவேண்டும்.

தாய்ப்பால் ஊட்டும் தாய்மார், முகக்கவசம் அணிந்து, தங்களது முகத்தை சற்று பின்னுக்கு திருப்பிக்கொண்டு, பால் ஊட்டும் நடவடிக்கையை மேற்கொள்ளலாம். ஏனெனில் குழந்தைக்குத் தனது தாயின் மூலம் பால் கட்டாயமாக கிடைக்கப்பெறவேண்டும்.

தாய்ப்பாலின் மூலம் கிடைக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை வேறு எந்த உணவின் மூலமும் பெற்றுக் கொள்ளமுடியாது. அத்துடன் உரிய காலத்துக்கு தாய்ப்பால் கிடைக்காமல் போவதால், குழந்தைகளுக்கு பிற்காலத்தில் புற்றுநோய், குழந்தைகளுக்கான தொய்வு, நீரிழிவு போன்ற பல் வேறு குறைபாடுகள் ஏற்படலாம் என்பது மருத்துவ ஆய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

நாடு பூராகவும் கொவிட் தொற்றுக்குள்ளாகி இருக்கும் அதிகமான தாய்மார், குழந்தைகளுக்கு கொவிட் பரவும் என்ற அச்சத்தில் தாய்ப்பால் ஊட்டுவதை நிறுத்தியுள்ளனர் என்று தகவல்கள் கிடைத்துள்ளன. அதனால் இதுதொடர்பாக பால் ஊட்டும் தாய்மார் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் - என்றார். (எ-இ)

# விதிகளை மீறிய 498 பேர் கைது!



கொழும்பு, செப். 1

சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் மொத்தம் 498 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 42 வாகனங்களும் தடுப்புக் காவலில் எடுக்கப்பட்டன.

அதேவேளை, இந்தக் குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்ரோபர் 30ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் மொத்தம் 62 ஆயிரத்து 85 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மேல் மாகாணத்துக்குள் உள் நுழைய முயன்ற 489 வாகனங்களில் பயணித்த ஆயிரத்து 153 நபர்களும், வெளியேற முயன்ற 316 வாகனங்களில் பயணித்த 639 நபர்களும் பொலிஸாரால் சோதனையிடப்பட்டுள்ளனர்.

மாகாணங்களுக்கு இடையேயான பயணத் தடை நடைமுறைப்படுத்தப்பட்டதிலிருந்து, வாகனங்களை ஆய்வு செய்ய மேற்கு மாகாணத்தின் 13 இடங்களில் வீதித்தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)




# ஒரு தொகுதி ஸ்புட்னிக் இலங்கை வந்தடைந்தது

கொழும்பு, செப். 1

ரஷ்யாவில் தயாரிப்பான ஸ்புட்னிக் வி கொரோனாத் தடுப்பூசிகளின் மற்றொரு தொகுதி இலங்கை வந்தடைந்துள்ளது.

15 ஆயிரம் ஸ்புட்னிக் வி தடுப்பூசி டோஸ்கள் நேற்று அதிகாலை 12.15 மணியளவில் ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடுப்பூசிகள் கண்டி மாவட்டத்துக்கு வழங்கப்படவுள்ளன என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் இதுவரையில் ஒரு இலட்சத்து 59 ஆயிரத்து 88 பேருக்கு ஸ்புட்னிக்வி தடுப்பூசியின் முதல் டோஸ் செலுத்தப்பட்டுள்ளது. தற்போது வந்த தடுப்பூசிகள் இரண்டாவது டோஸாக செலுத்தப்படும் எனறு தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# தரமில்லா மருந்துகள் அதிகளவு விலைக்கு!



கொழும்பு, செப். 1

கொரோனா நியூமோனியாவினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு தரமற்ற மருந்துகள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன என்று இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனூடாக கொரோனா நோயாளிகளுக்கு தரமற்ற மருந்துகள் வழங்கப்படும் வாய்ப்பு இருப்பதாக அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்க செயலாளர் அனுருந்த ரணவக்க தெரிவித்தார்.

கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள் உட்பட அனைத்து தரப்பினருக்கும் வழிகாட்டுதலொன்று வெளியிடப்படாத காரணத்தினால் இந்தத் தவறுகள் நடக்க வாய்ப்புள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ம)



## நேற்றுமுன்தினம்

# 536,438 பேருக்கு தடுப்பூசி ஏற்றல்!

கொழும்பு, செப். 1

இலங்கையில் கொரோனாவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் 5 லட்சத்து 36 ஆயிரத்து 438 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று மட்டும் (நேற்றுமுன்தினம்) மொத்தம் 5 லட்சத்து 71 ஆயிரத்து 589 பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன. அவர்களில், 12 ஆயிரத்து 604 பேருக்கு அஸ்ட்ராசெனேகா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டதோடு, 20 ஆயிரத்து 873 பேருக்கு மொடர்னா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன - என்றார். (ம)

# மூலிகைப் பொருள்களில் தயாரான முகக்கவசம்!



கொழும்பு, செப். 1

21 உள்ளூர் மூலிகைப் பொருள்களிலிருந்து தயாரிக்கப்பட்ட முகக் கவசம் நேற்றுமுன்தினம் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேவிடம் கையளிக்கப்பட்டது.

பெருங்காயம், கறுவாப்பட்டை, வெங்காயம், இஞ்சி, கொத்தமல்லி, வெனிவேல், கிராம்பு, இஞ்சி மற்றும் மூல மஞ்சள் உள்ளிட்ட 21 உள்ளூர் மூலிகைப் பொருள்களைப் பயன்படுத்தி, இந்த மூலிகை முகக்கவசம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த முகக்கவசம் புதிய கண்டுபிடிப்பாக காப்புரிமை பெற்றுள்ளது மற்றும் இலங்கை தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனத்தால் சான்றளிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் புதிய கண்டுபிடிப்பு ஆணைக்குழு ஏற்பாடு செய்த சஹசக் போட்டியில், இந்த முகக்கவசம் தங்க விருதை வென்றுள்ளது. சர்வதேச போட்டியில் சிறந்த கண்டுபிடிப்பாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமெரிக்க ஆக்கிரமிப்புகள் விட்டுச்செல்லும் குழப்பங்கள்

தமிழில்: பாலன்


வெளிநாட்டு மண்ணில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பும் அது விட்டுச் செல்லும் குழப்பநிலையும் ஒன்றும் புதிதல்ல. கடந்த இரு தசாப்தங்களில் மாத்திரம் அத்தகைய பல தலையீடுகள் இடம்பெற்றிருக்கின்றன. அவற்றில் மிகவும் முக்கியமானவை ஈராக், ஆப்கானிஸ்தான் போர்களாகும். 'இருபது வருடகால இரத்தக்களரிக்கு பிறகு அமெரிக்காவின் மிகவும் நீண்ட போரை நாம் முடிவுக்குக் கொண்டுவருகிறோம்' என்று ஆப்கானிஸ்தானில் கட்டவிழும் நெருக்கடி பற்றி உரையாற்றும்போது அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறினார்.

## போரின் பின்னணி

நியூயோர்க்கில் இரட்டைக் கோபுரங்கள் மீது 2001 செப்ரெம்பர் 11ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களை அடுத்து அல் குவைதாவையும் அதனுடன் தொடர்புபட்ட பயங்கரவாத அமைப்புகளையும் அழித்தொழிப்பதற்கென்று கூறிக்கொண்டு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷினால் ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் போர்கள் தொடுக்கப்பட்டன. பிராந்தியங்களின் மூலோபாய இடச்சூழல்களும் அவற்றின் பெருமளவு எண்ணெய்க் கையிருப்புகளும் கூட போர்களுக்கான துணைக்காரணிகள் என்று கூறப்பட்டன.

## ஈராக்கில் அமெரிக்கா

செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கு பின்னரான காலகட்டத்தில் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனிடம் பேரழிவு தரும் ஆயுதங்கள் இருப்பதாகக் கூறிக்கொண்டு அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமித்தது. சதாம் ஹுசைன் வளைகுடாப் போரின்போது இரசாயன ஆயுதங்களையும் உயிரியல் ஆயுதங்களையும் பயன்படுத்தியிருந்த போதிலும், 1991ஆம் ஆண்டு போர் நிறுத்தத்துக்கு பிறகு அந்த ஆயுதங்களைக் கைவிடுவதற்கு நிபந்தனையின்றி இணங்கிக்கொண்டார். அந்த ஆயுதங்களை அழித்தொழிக்கும் நடவடிக்கைகள் ஐக்கிய நாடுகளின் மேற்பார்வையில் இடம்பெற்றன. ஆனால், ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் கீழ் அமெரிக்காவும் ரொனி பிளயரின் கீழ் ஐக்கிய இராச்சியமும் பேரழிவு தரும் ஆயுதங்களில் பெருமளவானவற்றை ஹுசைன் பதுக்கிவைத்திருக்கிறார் என்பதற்கான புலனாய்வுத் தகவல்கள் தங்களிடம் இருப்பதாக கூறினார்கள். அந்த சான்றுகள் குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை சந்தேகம் கொண்ட போதிலும், பிரான்ஸ், ரஷ்யா மற்றும் ஜேர்மனியினால் சமர்ப்பிக்கப்பட்ட மகஜர் ஒன்றில் 'சந்தேகம் தொடர்ந்து நிலவுகின்ற அதேவேளை, ஈராக் இன்னமும் பேரழிவு தரும் ஆயுதங்களை அல்லது இந்த துறையில் வல்லமையை கொண்டிருக்கிறது என்பதற்கான எந்தவொரு சான்றும் கெடுக்கப்படவில்லை' என்று கூறப்பட்டது. சில வருடங்களுக்குப் பிறகு ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் ஈராக் மீதான போர் சட்டவிரோதமானது என்றும் ஐ.நா. சாசனத்தை மீறியது என்றும் கூறினார். மேற்கூறப்பட்ட புலனாய்வு தகவல்கள் தொடர்பில் அமெரிக்க மற்றும் ஐக்கிய இராச்சிய அரசுகளால் நடத்தப்பட்ட தனித்தனியான சுயாதீன விசாரணைகள் ஈராக் மீதான போரை தேவையற்றது என்று கருதின. 2003ஆம் ஆண்டு மார்ச் 19ஆம் திகதி ஐக்கிய இராச்சியம், ஆஸ்திரேலியா மற்றும் போலந்து துருப்புகளைக் கொண்ட கூட்டணிக்கு தலைமை தாங்கி புஷ் நிர்வாகம் ஈராக்கை ஆக்கிரமித்தது. அந்தப் படைகள் அப்போதைய அரசாங்கத்தை தூக்கியெறிந்து அதனிடத்தில் மேற்குலக ஆதரவுடனான தெரிந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் ஒன்றை பதவியில் அமர்த்தியது. ஈராக்கிய இராணுவம் கலைக்கப்பட்டதையடுத்து அதிகார வெற்றிடம் ஏற்பட்டு இறுதியில் நாடு நிலைகுலைந்து போனது. 2011 டிசெம்பரில் அமெரிக்கப் படைகள் விலகிய பின்னர் கூட ஈராக்கில் அரசியல் உறுதிப்பாடின்மையும் மதக் குழுக்களிடையிலான மோதல்களும் கிளர்ச்சியும் நிலவின. இந்த நிலைமை 2014ஆம் ஆண்டில் இடம்பெற்ற உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்தது. இதையடுத்து அமெரிக்கா இரண்டாவது தடவையாக தலையீடு செய்ய வேண்டியதாயிற்று. நெருக்கடி இன்னமும் தொடருகிறது.



## லிபியாவில் அமெரிக்கா

லிபியாவில் 42 வருடகால அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்த அமெரிக்கா தலைமையிலான விமானக்குண்டு வீச்சு தாக்குதல்களை ஓர் ஆக்கிரமிப்பு என்று குறிப்பிட்டுவிட முடியாது. ஏனென்றால், அதில் வெளிநாட்டு துருப்புகள் தரையில் சம்பந்தப்படவில்லை. நேட்டோவின் கீழ் பல்தேசிய கூட்டணியொன்றின் இராணுவத் தலையீடு விமானங்களையும் ஏவுகணைகளையும் பயன்படுத்தியே மேற்கொள்ளப்பட்டது. அது ஏழு மாதங்களுக்கு மேலாக நீடித்தது. விமானப் பறப்பு தடை வலயத்தை நிறுவுவதற்காக அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் கப்பல்கள் லிபியாவின் ஆகாய பாதுகாப்பு கட்டமைப்புக்களை தகர்ப்பதற்காக துல்லியமான ஏவுகணைத் தாக்குதல்களை சரமாரியாக தொடுத்தன. இதைத் தொடர்ந்து நேட்டோ தலைமையிலான கூட்டணி பிரான்ஸினதும் கனடாவினதும் கணிசமான ஆதரவுடன் விமானப்பறப்பு தடை வலயத்தை ஏற்படுத்தியதுடன் கடல் முற்றுகையையும் மேற்கொண்டது. அரசாங்கம் வீழ்ச்சியடைந்த பிறகு கள நிலைவரம் படிப்படியாக சீர்கெட்டுப்போனது. லிபியாவில் உள்ள பல்வேறு இன மற்றும் மதக்குழுக்களுக்கிடையிலான பதற்றநிலை முன்னரங்கத்துக்கு வந்தது. அதிலிருந்து இரண்டாவது உள்நாட்டுப்பேரை லிபியா கண்டது. இஸ்லாமிய கிளர்ச்சியும் மூண்டது.

## சிரியாவில் அமெரிக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011ஆம் ஆண்டில் இடம்பெற்ற சிரிய உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத்தின் ஏதேச்சதிகார ஆட்சியை எதிர்த்துப்போராடிய கிளர்ச்சிக் குழுக்களில் தனக்கு விருப்பமான குழுக்களுக்கு அமெரிக்கா மறைமுகமான ஆதரவை வழங்கியது. 2014ஆம் ஆண்டில் சிரியாவில் இருந்த இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா தலைமையிலான சர்வதேச கூட்டணி கொடூரமான விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்களை தொடங்கியது. ஒபாமாவின் கட்டளையின் கீழ் அமெரிக்கா ஆயிரக்கணக்கான ட்ரோன் தாக்குதல்களை நடத்தியது. 2016 ஆம் ஆண்டில் மாத்திரம் சிரியாவில் அமெரிக்கா 12 ஆயிரத்து 192 குண்டுகளைப் போட்டது என்று மதிப்பீடொன்று கூறுகிறது. 2017ஆம் ஆண்டு சிரிய அரசின் போர்க்குற்றம் அமெரிக்காவால் அப்பட்டமாக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து சிரியா மீது போரைத் தொடுக்கும் முடிவுக்கு அமெரிக்கா வரும் என்று கருதப்பட்டாலும் பின்னர் எதிர்பாராத விதமாக சிரியாவில் இருந்து துருப்புக்களைத் திரும்பப் பெறும் முடிவை ட்ரம்ப் அறிவித்தார். இன்று வரையும் அமெரிக்கா சிரியாவில் நிலைகொண்டிருந்தாலும் படைகள் திரும்பப் பெறப்படும் என்பதில் பைடனும் உறுதியாக உள்ளார்.




## ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா

ஆப்கானிஸ்தானுடன் நீண்டதொரு வரலாற்றை அமெரிக்கா கொண்டிருக்கிறது. 2001ஆம் ஆண்டில் அல் குவைதாவால் மேற்கொள்ளப்பட்ட 9/11 தாக்குதல்களைத் தொடர்ந்து அந்தப் பயங்கரவாதக் குழுவுடனும் அதற்கு புகலிடம் கொடுத்துவைத்திருக்கும் தலிபான்களையும் எதிர்த்துப் போரிடுவதற்காக அமெரிக்கப்படைகள் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தன. பிரிட்டன் இராணுவத்தின் ஆதரவுடன் தலிபான் ஆட்சியை கவிழ்த்த அமெரிக்கா, ஜனாதிபதி ஹமீட் கார்சாய் தலைமையில் மேற்குலக ஆதரவுடனான அரசாங்கத்தை நிறுவியது. ஆனால், தலிபான்கள் மீண்டும் தங்களை ஐக்கியப்படுத்தி அணிதிரட்டிக்கொண்டு கிளர்ச்சியை தீவிரமாக முன்னெடுத்தனர். அதனால், ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிப்பை முடிவுக்கு கொண்டுவருவதாக உறுதியளித்து பதவிக்கு வந்த ஒபாமா 2009ஆம் ஆண்டில் மேலும் மூவாயிரம் அமெரிக்கத் துருப்புகளை ஆப்கானிஸ்தானுக்குள் அனுப்பினார். ஆப்கானிஸ்தானில் இருந்து வெளிநாட்டுப் படைகளை வாபஸ் பெறுவதை நோக்கிய அக்கறையுடனான முதல் முயற்சி ஜனாதிபதி ட்ரம்பின் பதவிக்காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டது. 2020ஆம் ஆண்டில் ட்ரம்பால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாகத்தான் பைடனின் காலத்தில் தற்போது படைகள் மீளப்பெறப்பட்டுள்ளன. அமெரிக்காவினால் அதிகாரத்தில் இருந்து விரட்டப்பட்டு சுமார் இரு தசாப்தங்களுக்குப் பிறகு அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு தலிபான்கள் இப்போது காபூலுக்கு திரும்பியிருக்கிறார்கள்.

# அரசியலுக்காகப் பயன்படுத்தப்படும் காணாமலாக்கப்பட்டோர் விவகாரம்!

## திஸ்ஸ விதாரண தெரிவிப்பு



**கொழும்பு, செப். 1**

**அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் தீர்வுகாண முடியாது. பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் இதுவரை காலமும் இரு தரப்பினராலும் அரசியல் தேவைக்காக மாத்திரம் பயன்படுத்தப்படுகிறது. காணாமல் போனோர் விவகாரத்தில் உண்மைத் தன்மையுடன் செயற்பட்டால் மாத்திரமே ஒரு தீர்வுகாண முடியும்.**

இவ்வாறு லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரில் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் உண்மையான தரவுகள் இதுவரையில் கிடைக்கவில்லை. ஒவ்வொரு தரப்பினரும் மாறுபட்ட வகையில் தரவுகளை சமர்ப்பித்துள்ளனர்.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கப்பெற வேண்டும். அதில் இன வேறுபாடுகள் பார்க்கக் கூடாது. 2009ஆம் ஆண்டு போர் நிறைவு பெற்ற காலத்தில் இருந்து இப்போது வரை காணாமல் போனோர் தொடர்பில் பேசப்படுகிறதே தவிர உறுதியான தீர்வு எடுக்கப்படவில்லை.

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த விடயத்துக்கு ஒருபோதும் தீர்வைப்பெற முடியாது. பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை இதுவரை காலமும் இரு தரப்பினரும் தங்களின் அரசியல் தேவைகளுக்காக மாத்திரம் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

போர்க் காலத்தில் புலம்பெயர்ந்தவர்களும் தங்களின் ஆள் அடையாளங்களை உறுதிப்படுத்துவதற்கு முன்வருவதில்லை.

இவ்வாறான ஒருசில விடயங்களும் காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் இழுபறி நிலையில் இருப்பதற்கு ஒரு காரணியாக உள்ளது.

காணாமலாக்கப்பட்டோரது உறவுகளுக்கு நியாயம் வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு.

தமது உறவுகளுக்கு என்னவாயிற்று என்பதை அறிந்து கொள்ளும் உரிமை நீதி கேட்டுப் போராடுபவர்களுக்கு உண்டு.

காணாமல் போனோர் விடயத்தில் தீர்வு காண வேண்டுமாயின் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து ஒரு கொள்கைக்கமைய செயற்பட வேண்டும் -என்றார். (எ-இ)



# தங்கத்தின் விலை மீண்டும் வீழ்ச்சி!

கொழும்பு, செப். 1

உலக சந்தையில் தங்கத்தின் விலை மீண்டும் வீழ்ச்சியடைந்துள்ளது. நேற்றைய தினத்துடன் ஒப்பிடுகையில் தங்கத்தின் விலை மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

அதன்படி, ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 0.3 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

இதனடிப்படையில், உலக சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை ஆயிரத்து 813 அமெரிக்க டொலராக விற்பனை செய்யப்படுகின்றது.

அமெரிக்க டொலரின் பெறுமதி உயர்வடைந்துள்ளமை தங்கத்தின் விலை குறைவடையக் காரணம் என பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (ம)



# போலி நாணயத்தாளுடன் மூவர் சீதுவவில் கைது!

கொழும்பு, செப்.1

சீதுவ பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் சிறப்பு நடவடிக்கையில் 600 போலி 500 ரூபா நாணயத் தாள்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

லியானகே முல்ல, வீரகுல அங்கம்பிட்டிய பகுதிகளிலேயே இந்த சிறப்பு நடவடிக்கை நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு இளைஞர்களை நேற்றுமுன்தினம் பிற்பகல் லியானகே முல்ல பகுதியில் தடுத்து நிறுத்தி சோதனையிடப்பட்டபோது 60 போலி 500 ரூபா நாணயத்தாள்கள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கு அமைவாக வீரகுல அங்கம்பிட்டிய பகுதியில் உள்ள ஒரு வீட்டை சோதனையிட்டபோது அங்கு மேலும் 540 போலி 500 ரூபா நாணயத் தாள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் 21, 43 மற்றும் 45 வயதுடையவர்கள் என்றும், ஒழுங்கமைக்கப்பட்ட மோசடியுடன் தொடர்புடையவர்கள் என்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து போலி நாணயம் அச்சிடும் இயந்திரம், மடிக்கணினி, கணினி மற்றும் பல பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (எ-இ)

# சீனியைப் பதுக்கினால் இனி கடும் நடவடிக்கை

## அரசு எச்சரிக்கை




கொழும்பு, செப்.1

நாட்டுக்கு சீனியை இறக்குமதி செய்யும் சில வர்த்தகர்கள் மிகவும் மோசமான வகையில் மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக அரசாங்கம் கடுமையான தீர்மானங்களை எடுக்கும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இதே போன்று தான் சமையல் எரிவாயு விலையை அதிகரிக்க வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அரசு இணக்கம் தெரிவிக்காமையால் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக அரசு தீர்மானங்களை எடுக்கும்.

சீனிப் பிரச்சினை தொடர்பில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இன்றும் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அடுத்த வாரம் இது தொடர்பான நிலையான தீர்மானம் எடுக்கப்படும். -என்றார். (எ-இ)

# திருகோணமலையில் கைக்குண்டு மீட்பு

திருகோணமலை, செப். 1

திருகோணமலை துறைமுகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கொள்கலன் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

சட்டத்தரணியொருவரின் வீட்டுக்கு முன்னாலேயே மேற்படி கைக்குண்டுகள் மீட்கப்பட்டன. இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த பகுதிகளில் உள்ள கண்காணிப்புக் கமராக்களின் உதவியுடனும் மேற்படி விவகாரம் ஆராயப்படுகின்றது. (ம)



# அதிபர், ஆசிரியர் சேவைகளை வரைவிட்ட சேவையாக்க முடிவு!

ஆசிரியர் சேவை, ஆசிரிய ஆலோசகர் சேவை மற்றும் அதிபர் சேவை போன்றவற்றை வரைவிட்ட சேவையாக 2021 நவம்பர் மாதம் 20 திகதிக்கு முன்னர் வர்த்தமானியில் அறிவிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மேலும் பல தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

'அதிபர், ஆசிரியர் சேவைகளில் காணப்படும் சம்பள முரண்பாடுகளை நீக்குதல்' தொடர்பாக ஆராய்ந்து அமைச்சரவைக்கு பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப செயற்குழுவால் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களின் 33 தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அமைச்சரவை உப செயற்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை கொள்கையாக அங்கீகரித்தல்.

ஆசிரியர் சேவை, ஆசிரிய ஆலோசகர் சேவை மற்றும் அதிபர் சேவைகள் போன்றவற்றை வரைவிட்ட சேவைகளாக 2021 நவம்பர் மாதம் 20 திகதிக்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடல். அமைச்சரவை உப செயற்குழு மூலம் அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்காக பரிந்துரைக்கப்பட்ட சம்பளத் திருத்தங்களை, 2022 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் படிப்படியாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2021 செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்களில் தமது கடமைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு 5 ஆயிரம் ரூபா விசேட கொடுப்பனவு செலுத்துதல். உப செயற்குழுவின் இதர யோசனைகள் மாகாண சபைகள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுடன் இணைந்து கல்வி அமைச்சின் மூலம் 6 மாதங்களில் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனைவரையும் நேசிப்போம்

இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலையில் வேலை செய்யும் ஒருவர், ஒரு நாள் மாலை வேலை முடியும் தறுவாயில் இறைச்சி பதப்படுத்தும் குளிர் அறைக்குள் ஏதோ வேலையாக இருந்தபோது எதிர்பாராதவிதமாய் அதன் தானியங்கி கதவு பூட்டிக்கொண்டுவிட்டது.

உடனே பெரும் கூச்சலிட்டாலும் அவர் எழுப்பிய ஓசை வெளியே யாருக்கும் கேட்கவில்லை மேலும் பெரும்பாலானோர் வேலை முடிந்து கிளம்பிவிட்டனர்...

இன்னும் சிறிது நேரத்தில் ஐஸில் உறைந்து இறக்கப்போகிறோம் என்று எண்ணி கவலை அடைந்தார் அவர்.

அப்போது கதவு திறக்கும் சத்தம் கேட்டது. உயிர் வந்தவராய் வெளியே ஓடி வந்தார். தொழிற்சாலை காவலாளி நின்று கொண்டிருந்தான். சந்தோஷத்தில் அவனை கட்டித் தழுவிக்கொண்டார்.

அவனிடம் "நான் உள்ளே இருப்பது உங்களுக்கு எப்படி தெரிந்தது?" என்று கேட்டார்.

"சேர். நான் இங்க 10 வருசமா வேலை செய்றேன்... நீங்க ஒருத்தர் மட்டும் தான் என்னையும் ஒரு மனுசனா மதிச்சு காலை வணக்கம் மாலை குட் பை ரெண்டும் சொல்பவர்.


இண்டைக்கு காலைல வணக்கம் சொன்னீர்கள். ஆனால் மாலை உங்களோட குட் பை என் காதில் விழவில்லை. உடனே சந்தேகம் வந்து உள்ள வந்து ஒவ்வொரு இடமாக தேடினேன்...அப்போதுதான் உங்களைக் கண்டுபிடிச்சேன் ..." என்றான்

ஒருவருக்கொருவர் மற்றவர்களை தரக்குறைவாக எண்ணாமல் பரஸ்பரம் மரியாதை செலுத்திக்கொள்வது எப்போதுமே நன்மை பயக்கும் ஒரு விஷயம் தானே நண்பர்களே.

### நம் முன்னோர்கள் சொல்லிய செய்யக் கூடாத செயல்கள்


- உணவிடை நீரைப் பருகாதே.
- கண்ணில் தூசி கசக்காதே.
- கழிக்கும் இரண்டை அடக்காதே.
- காதைக் குத்திக் குடையாதே.
- கொதிக்கக் கொதிக்க குடிக்காதே.
- பல்லில் குச்சி குத்தாதே.
- பசிக்காவிட்டால் புசிக்காதே.
- பசித்தால் நேரம் கடத்தாதே.
- வாயைத்திறந்து மெல்லாதே.
- வில்லின் வடிவில் அமராதே.

## வர்ணம் தீட்டுவோம்



## பொன்மொழிகள்..!

- துன்பங்களை அனுபவித்த காலத்தை மறந்து விடு. ஆனால் அது உனக்குக் கற்பித்த பாடத்தை மறந்து விடாதே!
- செய்து முடிக்கப்பட்ட மாபெரும் சாதனைகள் அனைத்தும் செய்ய முடியாதவைகள் என்று முதலில் பலரால் நிராகரிக்கப்பட்டவைதான்.
- செய்ய முடிந்தவன் சாதிக்கிறான், செய்ய முடியாதவன் போதிக்கிறான்.





# புகைப்படக் கருவி

புகைப்படக் கலையின் பெருமையை அனைவரும் உணர்ந்துகொள்ளும் வகையில் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 19 ஆம் திகதி உலக புகைப்பட தினம் கொண்டாடப்படுகிறது.

இவ்வருடம் 175 ஆவது ஆண்டு புகைப்பட தினமாகும். புகைப்படக் கருவியை உருவாக்குவதற்கான முயற்சி 13 ஆவது நூற்றாண்டிலேயே தீவிரமடைந்து விட்டது. அப்போது கேமரா அப்ஸ்குரா என்ற கருவி கண்டுபிடிக்கப்பட்டது.


அதைத் தொடர்ந்து, சிறியதும், பெரியதுமாக பல்வேறு கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. மிகப்பெரிய முன்னேற்றம் 1825 ஆம் ஆண்டு ஏற்பட்டது.

பிரான்ஸைச் சேர்ந்த ஜோசப் நீப்ஸ் என்பவர் ஒரு கட்டடத்தின் புகைப்படத்தை தன்து கருவியில் படம் எடுத்தார். ஆனால், அந்த பிம்பம் 8 மணி நேரத்திற்குப் பிறகு அழிந்துவிட்டது.

1839ஆம் ஆண்டு சர்ஜான் ஹெர்செல் என்பவர் கண்ணாடியைப் பயன்படுத்தி நெகட்டிவ்களை எடுக்கும் முறையைக் கண்டுபிடித்தார். அவர்தான், இக்கலைக்கு போட்டோகிராபி என்று பெயர் வைத்தார். இது கிரேக்க மொழியிலிருந்து வந்த சொல்லாகும். அதன் அர்த்தம் ஒளியின் எழுத்து என்பதாகும். அதே ஆண்டு, லூயிஸ் டாகுரே என்பவர், சில்வர் காப்பர் பிளேட்டில் பிம்பங்கள் விழும் வகையிலான புகைப்படம் எடுக்கும் முறையை அறிமுகப்படுத்தினார். மரத்தாலான இந்த புகைப்படக் கருவியில் லென்ஸ் பொருத்தப்பட்டிருந்தது. இதற்கு டாகுரியோடைப் என்று பெயரிடப்பட்டு மிகவும் பிரபலமாக விளங்கியது. 1888 ஆம் ஆண்டு ஜார்ஜ் ஈஸ்ட்மேன் முதல் முறையாக பேப்பர் பிலிம்களைப் பயன்படுத்தி பொக்ஸ் கேமராவில் புகைப்படம் எடுக்கும் முறையைக் கண்டறிந்தார்.

முதல் டிஜிட்டல் கேமராவை சோனி நிறுவனம் 1981 ஆம் ஆண்டு தயாரித்தது. அதன் பின்பு, தற்போது வரை டிஜிற்றல் கமராக்களில் பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.


## விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்புகளும்



ரேடியோ
கண்டுபிடித்தவர்.
மார்கோனி



தொலைபேசி
கண்டுபிடித்தவர்.
கிரகாம்பெல்



குளிர்சாதனப் பெட்டி
கண்டுபிடித்தவர்.
ஜேம்ஸ் ஹாரிசன்



மின்பல்பு
கண்டுபிடித்தவர்.
தாமஸ் ஆல்வா எடிசன்



## ஆங்கிலம் கற்போம்

| | |
|---|---|
| Be Ready | தயாராக இரு |
| Meet Me | என்னை சந்தி |
| Meet Him | அவனை சந்தி |
| Don't Talk | பேசாதே |
| Speak Loudly | சத்தமாக பேசு |
| May I Come in | நான் வரலாமா |
| Yes Come in | உள்ளே வா |
| Forget it | மறந்து விடு |
| Well Done | நன்றாக செய்தாய் |
| I Don't Like | எனக்கு பிடிக்காது |
| No I'm Not Hungry | எனக்கு பசியில்லை |
| See You Later | பிறகு சந்திப்போம் |
| Go Ahead | முன்னால் போ |
| Drive slowly | மெதுவாக ஓட்டு |
| Go back | திரும்பிப் போ |
| I can | என்னால் முடியும் |
| Not me | நான் இல்லை |
| Just listen | இதை கேள் |
| From which | எதிலிருந்து |
| Are you ok | நீங்கள் நலமாக |
| That is Easy | அது எளிது |
| Stand there | அங்கே நில் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# லோகேஷ் இயக்கத்தில் சூப்பர் ஹீரோவாக சூர்யா

தமிழ்த் திரையுலகில் மாநகரம், கைதி, மாஸ்டர் ஆகிய வெற்றிப் படங்களை இயக்கிய இயக்குநர் லோகேஷ் கனகராஜ் தற்போது கமல் நடிக்கும் 'விக்ரம்' படத்தை இயக்கி வருகிறார்.

இந்த நிலையில் லோகேஷ் கனகராஜ் அடுத்ததாக இயக்கும் திரைப் படத்தில் நடிகர் சூர்யா நடிக்கவுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது. இந்தப் படத்தில் நடிகர் சூர்யா சூப்பர் ஹீரோ கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் படத்தை இயக்குநர்களான மணிரத்னம், ஷங்கர், முருகதாஸ், வெற்றிமாறன், கௌதம்மேனன், லிங்குசாமி, மிஷ்கின், சசி, வசந்தபாலன், பாலாஜி சக்திவேல் ஆகியோர் இணைந்து தொடங்கிய Rain On Films தயாரிப்பு நிறுவனம் தயாரிக்க உள்ளது.

நடிகர் சூர்யா தற்போது 'எதற்கும் துணிந்தவன் மற்றும் 'ஜெய் பீம்' ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.



# வாழ்க்கை நிதர்சனங்கள்

காட்டுக்கு ராஜாவாக வாழ்ந்தாலும் சிங்கம் தன் கடைசி காலங்களில் பரிதாபத்துக்குரிய வகையில் தான் மரணிக்கின்றது. இளவயதில் ராஜ கம்பீரமாக பலமான உயிரினமாக சிங்கம் வலம் வருவது அனைவரும் அறிந்த விடயம். அது இரையை வேட்டையாடி தின்ற பின் மிச்சத்தை கழுதைப் புலிகளுக்கு விட்டு விடும்.

ஆனால் சிங்கமானது வயதான காலத்தில் மற்ற விலங்கினை வேட்டையாடிக் கொல்லவோ அல்லது தன்னைத் தானே காத்துக் கொள்ளவோ இயலாது.

திரியும். உறுமும். இறுதியில் கழுதைப் புலிகள் ஒன்றுகூடி வயதான சிங்கங்களை அடித்துச் சாப்பிடும் நிலைக்கு தள்ளப்படக்கூடும்

அதுவும் சுலபமான மரணமாக இருக்காது. சிங்கம் உயிரோடு இருக்கும்போதே அதனைக் கொஞ்சம் கொஞ்சமாய் கடித்து தின்பன கழுதைப்புலிகள்.

இதுதான் வாழ்க்கை.

மிகவும் குறுகிய காலகட்டமான, இந்த வாழ்க்கை, மிகவும் தற்காலிகமானது. அந்த தற்காலிகத்தை, வயதான சிங்கங்களில் வாழ்க்கைபோல் கழிக்க முடியாது.

இந்த உலகில் நிரந்தரம் என்று ஒன்றுமில்லை. காதல், ஆற்றல், தகுதி, திறமை ஆகிய அனைத்தும் காலத்தால் அழியும்.

காணாமற் போகும். அதனால், பண்பாக , அன்போடு, பலருக்கு பயனுற வாழப் பழகுங்கள். கடந்தகாலம் நன்றாய்க் கழிய எதிர்காலம் செழிப்பாய் அமையும்.




## twitter

Selva Bharathi @asdbharathi

வலிமையான மனம் என்பது எதற்கும் கவலைப்படாமல் இருப்பது அல்ல. உடனடியாக மீண்டு வருவது.

Anusha @Anussha21

சிரிப்பு மிகவும் அழகானது தான் மற்றவர்கள் நம்மைப் பார்த்து சிரிக்காத வரை.




இதுதாண்டா ஸ்கூலு. இதுலதான் ஒரு காலத்தில படிச்சிக்கிட்டு இருந்தேன்

#Students





# இன்றைய நாள்

**மேடம்:** அனைவரிடமும் நேசமுடன் பழகுவீர்கள். யோகம் கூடும். வீண் செலவுகள் குறைந்து நிம்மதி வரும். உறவால் நன்மை உண்டு. பிறரால் ஏற்பட்ட மனக்கஷ்டம் அவர்களாலேயே நீங்கும்.

**இடபம்:** குழந்தைகளின் செயல்களால் பெருமிதம் அதிகரிக்கும். திடீர் பயணம் உண்டு. வீடு, வாகனத்தால் வருமானம் வரும். பணியாளர்களுக்கு உற்சாகம் கூடும். நட்பு வட்டம் விரியும்.

**மிதுனம்:** கடந்த கால இனிய அனுபவத்தைப் பகிர வாய்ப்பு வரும். தேவையின்போது திடீர் உதவி கிட்டும். அன்பளிப்பு கிடைக்கும். மற்றவர்களை அனுசரித்து சென்று பலன் பெறுவீர்கள்.

**கடகம்:** பிறர் நலனுக்காக செலவு செய்ய வேண்டி இருக்கும். நெருங்கிய நண்பரிடம் திடீர் இடைவெளி வந்தால் கவலை வேண்டாம். குழந்தைகளின் அறிவுத்திறனைக் கண்டு மகிழ்வீர்கள்.

**சிம்மம்:** சந்தோஷம் பெருகும்படியான எதிர்பாராத செலவுகள் வரும். எடுத்த விஷயங்களில் சிறுசிறு தடை, தாமதம் ஏற்படும். சவால்கள், வாக்குவாதங்களில் வெற்றி பெறுவீர்கள்.

**கன்னி:** கவனம் சிதறாமல் கடமையில் கண்ணாயிருப்பீர்கள். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் தீர ஆரம்பிக்கும். உறவினர் வீட்டு சுபநிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.

**துலாம்:** பழைய நட்பு ஒன்று மறுபடியும் கிடைக்கும். குடும்பத்தின் அடிப்படை வசதிமேம்படும். வருமானம்வரும். வெளியூர், வெளிநாட்டில் உள்ள உறவினர் மகிழ்ச்சியை பகிர்வர்.

**விருச்சிகம்:** பிரார்த்தனை ஒன்றை நிறைவேற்றி நிம்மதி அடைவீர்கள். அடுத்தவர்கள் கடனுக்கு பொறுப்பேற்காமல் இருப்பது நல்லது. புதுமை படைக்கும் நாளாக இருக்கும்.

**தனுசு:** மற்றவர்களின் மனதைப் புரிந்து கொண்டு பேசுவது நல்லது. குடும்பத்தில் சண்டை ஏற்பட்டாலும் அதைத் தீர்த்து வைப்பீர்கள். நன்மை அடைவீர்கள். சிக்கனம் தேவை.

**மகரம்:** எந்த ஒரு விஷயமும் சற்று நிதானமாக நடக்கும். எதிர்ப்பை சமாளித்து முயற்சியில் வெற்றி காண்பீர்கள். சிக்கனமாக இருக்க வேண்டுமென்று தீர்மானிப்பீர்கள்.

**கும்பம்:**மனதில் இருந்த தீய எண்ணம் அகலும். மந்த நிலை வேண்டாம். புதிய கலையை கற்கும் விருப்பம் கைகூடும். உழைப்பு கூடும்.

**மீனம்:** பிரச்சினை ஒன்று தீரும். மன உளைச்சல் நீங்கும். வேலை சம்பந்தமாக இருந்த அலைச்சல், அதிருப்தி நீங்கும். விட்டுக் கொடுத்து பிரச்சினையை தீர்ப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பக்கத் தொடர்ச்சி....

## சாவு...

முன்தினம் 194 பேர் கொரோனாத் தொற்றால் சாவடைந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 9 ஆயிரத்து 185 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்தவர்களில் 94 பெண்களும், 100 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

மேலும், கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 4 ஆயிரத்து 221 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 40 ஆயிரத்து 302 ஆக அதிகரித்துள்ளது. (ஒ,22)

## இலங்கைக்கு...

தப்படும் என்று நிதி அமைச்சின் செயலர் எஸ்.ஆர்.ஆட்டிகல தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 787 மில்லியன் அமெரிக்க டொலரும், பங்களாதேஷ் மத்திய வங்கியிடமிருந்து 150 மில்லியன் அமெரிக்க டொலரும், சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து 300 மில்லியன் அமெரிக்க டொலரும் இலங்கைக்கு இன்று அல்லது நாளை கிடைக்கப்பெறும் என்று அவர் குறிப்பிட்டார். (ஒ.5,இ)

## முதியோர்...

உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் சோதனையிலேயே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் கோப்பாயிலுள்ள இடைநிலை சிகிச்சை மையத்துக்கு கொண்டு செல்லப்படவுள்ளனர். (ஒ.5)

## பாணின்...

யாளர் சங்கச் செயலர் கா.பாஸ்கரன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பேக்கரி உற்பத்திப் பொருள்களின் மூலப்பொருள்களான கோதுமை மா, சீனி, தேங்காய் எண்ணெய், மாஜரின் போன்றவற்றின் விலைகள் சடுதியாக அதிகரித்ததால், யாழ். மாவட்ட செயலருடன் கலந்துரையாடி எமது நிலைப்பாட்டை தெரியப்படுத்தியதுடன் இன்று தொடக்கம் ஒரு இறாத்தல் பாணின் விலையை ஐந்து ரூபாவால் அதிகரிக்க தீர்மானித்துள்ளோம். எதிர்காலத்தில் மூலப் பொருள்களின் விலை குறைவடையும் பட்சத்தில் மீண்டும் பாணை பழைய விலைக்கு விற்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இடத்துக்கு இடம் பணிஸ் வகைகள் வேறுபட்ட விலைகளில் விற்பனை செய்யப்படுவதால், உற்பத்தியாளர்களும் பாவனையாளர்களும் பாதிக்கப்படுகின்றனர். தற்போதைய பயணத் தடைக்காலத்தில் பாவனையாளரின் நன்மை கருதியும் விலை மாறுபாட்டைத் தடுக்கும் முகமாகவும் பேக்கரி உற்பத்திப் பொருள்களின் (பணிஸ் வகைகள்) ஆகக் கூடிய சில்லறை விற்பனை விலையும் தீர்மானிக்கப்பட்டுள்ளது-என்றுள்ளது. (ஒ.5)



# பூலோக தேவாமிர்தம்!

நவீன யுகத்தில் நாம் மறந்துபோன நம் ஆரோக்கிய உணவு. பழைய சோறு பச்சை மிளகாய் பாடலில் மட்டுமே தற்பொழுது கேட்கக் கூடியதாக இருக்கின்றது.

இன்று உலகமே நவீனமயமானதால் பழைய சோறு என்றால் என்ன என்று கேட்கும் அளவுக்கு ஆகிவிட்டது. நம் முன்னோர்கள் இந்த உணவுகளை உண்டுதான் ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் இல்லாமல் அவர்கள் நல் ஆரோக்கியமாக நீண்ட காலம் வாழ்ந்தார்கள்.

நாம் மறந்துபோன அந்த பழைய சோற்றினை உண்டால் என்ன நன்மைகள் நம் உடலுக்கு கிடைக்கும் என்பதை பார்க்கலாம்.

உடலுக்கு நன்மை தரும் பக்ரீயாக்கள் அபரிமிதமான அளவில் இதில் இருக்கின்றன. காலையில் இதை சாப்பிடுவதால், வயிறு தொடர்பான நோய்கள் குணமாகும். இந்த உணவு, நார்ச்சத்துத் தன்மையையும் கொண்டிருப்பதால், மலச்சிக்கலை நீக்கும். உடல் சோர்வை போக்கும் தன்மை கொண்டது.

உயர் இரத்த அழுத்தம் இருப்பவர்களுக்கு அதைக் கொஞ்சம் கொஞ்சமாக குறைக்கும் தன்மை கொண்டது. எல்லாவிதமான வயிற்றுப் புண்களுக்கும் பழைய சோறு வரப்பிரசாதம். புதிய நோய்த்தொற்றுகள் எதுவும் ஏற்படாமல் தடுக்கும்.

வனப்பைத் தரும் இளமைத் தோற்றத்தை தக்க வைக்க உதவும்.

# கொலுசு



கொலுசு: கல்லீரல், மண்ணீரல் , பித்தப்பை , சிறுநீரகம் , சிறுநீர்ப்பை, வயிறு போன்ற மிக முக்கிய உறுப்புகளின் செயற் திறனை தூண்டிவிடும் அற்புதமான அணிகலன் கொலுசு. கருப்பை இறக்கப் பிரச்சினையை தடிமனான கொலுசு அணிவதன் மூலம் தீர்க்கலாம்.




# ஆரோக்கியமான நகத்தை பெறுவதற்கான 5 வழிகள்!

1. உங்கள் நகங்கள் பலவீனமாக இருந்தால் அல்லது பிறப்பிலேயே அவை அப்படி என்றாலும், நல்ல நகபுறத்தோல் எண்ணெய் பயன்படுத்துவது சிறந்தது. இது உங்கள் நகங்களுக்கு ஊட்டச்சத்து அளித்து அவற்றை வலுவாக்குகிறது.
2. உங்கள் நகங்களை இரு திசையிலும் சீராக்குவது பாதிப்பை ஏற்படுத்தலாம். இதை தவிர்க்க ஒரு திசையில் மட்டும் நகங்களை சீராக்கவும்.
3. தண்ணீர் உங்கள் நகங்களை நீர்த்தன்மை அற்றுப்போக செய்யலாம். எனவே, கைகளை கழுவும் ஒவ்வொரு முறையும், உங்கள் நகங்களையும் மாய்ஸ்சுரைஸ் செய்வது அவசியம். மேலும் நகங்கள் உடைவதை தவிர்க்க, தண்ணீரில் நீண்ட நேரம் கையை வைத்திருக்க வேண்டிய வேலைகளை செய்யும் போது கையுறை அணிந்து கொள்ளவும்.
4. நகப்பூச்சு பயன்படுத்துவது உங்கள் நகங்களை பாதுகாத்து, ஈரப்பத இழப்பை கட்டுப்படுத்துகிறது. அடிப்படை பூச்சு, நகங்கள் நிறம் மங்குவதையும் தடுக்கிறது. ஆனால், நகப்பூச்சில் அசிட்டோன், அல்கஹால், எத்தனால் அசிடேட் இருப்பதால் இதை அளவுக்கு அதிகமாக பயன்படுத்த வேண்டாம்.
5. நகங்கள் பாதிக்கப்படுவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று நகங்களை அடிக்கடி கடிக்கும் பழக்கமாகும். இது நகங்களை பாதிக்கிறது. இரத்தக் கசிவு மற்றும் வலியை உண்டாக்கும்.

# நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க...

- நடைப்பயிற்சி, உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.
- பழங்கள், காய்கறிகள் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- பால், மோர், இளநீர் போன்றன அருந்தலாம்.
- நீராவி பிடிக்கலாம் ( Steam Inhalation )
- மிதமான சூடான பாலில் சிறிதளவு மஞ்சள் , மிளகு, பனங்கற்கண்டு சேர்த்து பருகலாம்.
- உங்கள் இருப்பிடத்தில் தினமும் 15-20 நிமிடங்கள் சூரிய ஒளியில் நிற்கவும் (காலை 10 மணிக்கு, மாலை 4 மணிக்கு பிறகு)
- ஒரு நாளைக்கு 2 முதல் 3 முறை வெதுவெதுப்பான நீரில் கல் உப்பு மற்றும் மஞ்சள் தூள் சேர்த்து தொண்டையில் படுமாறு வாய் கொப்பளிக்கவும் ,
- சுக்கு, திப்பிலி , ஆடாதோடை போன்ற மூலிகைகள் கொண்ட கபசுர குடிநீர் அருந்தலாம் . ஒரு தேக்கரண்டி கபசுர பொடியுடன் 240 மி.லி. தண்ணீர் சேர்த்து நன்றாக கொதிக்க வைத்து , அது 60 மி.லி. அளவு சுண்டியவுடன் நாள் ஒன்றுக்கு ஒரு வேளை உணவுக்கு முன் (குழந்தைகளுக்கு 30 மி.லி. பெரியவர்களுக்கு 60மி.லி.) அருந்த வேண்டும். அதோடு, மருத்துவரின் ஆலோசனைப்படி விற்றமின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர்ச்செய்கை மேற்கொள்ள வில்லுக்குளத்தை சீரமையுங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி, செப். 1

வட்டக்கச்சி கமநலசேவை திணைக்களத்தின் கீழ் உள்ள கல்மடு வில்லுக் குளம் பல தசாப்தங்களாக சீரமைப்பு இன்றிக் காணப்படுவதால் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியவில்லை என்று அந்தப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது 1955ஆம் ஆண்டு குடியேற் றத்தின் போது சீரமைக்கப்பட்ட வில்லுக்குளம் பல தசாப்தங்கள் கடந்துள்ள நிலையில் இதுவரைகாலமும் சீரமைப்பு இன்றிக் காணப்படுகிறது.

அத்துடன் குளத்துக்கு என ஒதுக்கப்பட்ட 20 ஏக்கர் காணியை பலர் அத்துமீறி கையகப்படுத்தியுள்ளனர். இதன் காரணமாக குளம் சீரமைப்புக்கென ஒதுக்கப்பட்ட பணத்தைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. தற்போது குளத்தை சுற்றி பெரிய மரங் களும் வளர்ந்துள்ளதுடன் அணைக் கட்டுப் பகுதி முற்றாக சேதமடைந்துள்ளது.

எனவே இக்குளத்தின் சீரமைப்புத் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். (ஐ-316)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
28
12
1938



மறைவு
04
08
2021

### அமரர் திருமதி பழனிவேல் ஜெயலட்சுமி
(நயினாதீவு)

எங்கள் அன்புத் தெய்வம் அம்மாவின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01.09. 2021) புதன்கிழமை வில்லூன்றி புனித தீர்த்தக் கரையிலும் (03.09.2021) வெள்ளிக்கிழமை வீட்டுக்கிருத்திய கிரியைகள் எமது இல்லத்திலும் இடம்பெறும்.

இறுதி அக்கினி சங்கம நிகழ்வில் பங்குகொண்ட மற்றும் பல வழிகளிலும் அஞ்சலி, ஆறுதல் தெரிவித்ததுடன் பேருதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களிற்கும் அம்மா நோயுற்றபோது சேவைபுரிநத வைத்தியர்கள், பணியாளர்களிற்கும் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தற்போதைய சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக அனைவரையும் அழைக்க முடியாமைக்கு அகம் வருந்துகின்றோம்.

105, காரைநகர் வீதி,
வில்லூன்றி பிள்ளையார் கோவிலடி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
021 222 5766

---

## கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவில் தென்னை அபிவிருத்தி உதவியாளராக கடமையாற் றும் திருமதி.சு.ருஷியா அவர்களின் அன்பு மாமியார்

**அமரர் திருமதி.செல்வராதாதேவி கொங்காதரன்**

அவர்கள் 31.08.2021 அன்று இறைபதமடைந்தமையால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்
யாழ்ப்பாண பிராந்திய காரியாலயம் தென்னை பயிர்ச்செய்கை சபை
பளை - கிளிநொச்சி

---

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியர் திருமதி கமலினி இராஜேஸ்வரன் அவர்களின் மாமனார்

**திரு. செல்லத்துரை கந்தசாமி**

அவர்களின் பிரிவை முன்னிட்டு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 28.04.1943
இறப்பு 29.08.2021

அதிபர், ஆசிரியர்கள்
யா/கைதடி குருசாமி வித்தியாலயம்

---

## மரண அறிவித்தல்

மண்ணில்
28
08
1939



விண்ணில்
30
08
2021

### திருமதி கனகமணி சதாசிவம்
(ஓய்வு பெற்ற அதிபர்)

யாழ்ப்பாணம் நயினாதீவை பிறப்பிடமாகவும் நந்தாவில் ஒழுங்கை. தாவடி தெற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் மு/புதுக்குடியிருப்பு தேவிபுரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகமணி சதாசிவம் (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்கள் 30.08.2021 அன்று தற்போதைய சொந்த இடமான தாவடியில் இயற்கை எய்தியுள்ளார்.

அன்னார் காலம்சென்ற செல்லையா சதாசிவம் ( ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் அன்பு துணைவியாரும் காலம்சென்ற சுப்பிரமணியம் வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகளும் காலம்சென்ற செல்லையா பொன்னம்மாவின் அன்பு மருமகளும் ரூபகௌரி (ஆசிரியை-யாழ் பெரியபுலம் மகா வித்தியாலயம்) ரூபமாலினி (கிளிநொச்சி) தருமரூபன் (உரிமையாளர்-ரூபன் பல்பொருள் வாணிபம் (வள்ளிபுனம்)) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மதனராசா (தாவடி). கங்கேஸ்வரன் (உரிமையாளர்- அப்பன் உதிரிகள் வாணிபம்-கிளிநொச்சி.அப்பன் அரிசி ஆலை-புதுக்குடியிருப்பு) பாலதேவி (ஆசிரியர்- கிளி இராமநாதபுரம் அ.த.க பாடசாலை) ஆகியோரின் மாமியாரும் நடராசா (தாவடி) காலம்சென்ற துரைவீரசிங்கம் (தேவிபுரம்) புஷ்பராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு சகோதரியும் காலம்சென்ற குணராணி. லோகநாயகி (தேவிபுரம்). ரவீந்திரநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் தயாளன் (கனடா). நகுலேஸ்வரன் (குமிழமுனை) குகனேஸ்வரன். ஜெகதீஸ்வரன். விக்கினேஸ்வரன் (தேவிபுரம்) ஆகியோரின் அத்தையும் நவஜீவன் (பிரபு). கலையரசி (வாணி). கயவதனா. நக்கீரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியம்மாவும் கம்சிகா. தேனுஜன். தரங்கினியன். கீஜேசுதன். திருமதி. தர்ஷிகா ரவிப்பிரசாத். கோபிகா. டர்ஜிகா. மிதுஷிகா ஆகியோரின் பேர்த்தியும் தஷ்வந்த் இன் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.08.2021 அன்று அன்னாரின் இல்லத்தில் 4 மணியளவில் நடைபெற்று தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் ஒழுங்கை,
தாவடி தெற்கு, கொக்குவில்.


தகவல்:
குடும்பத்தினர்.

0779237362 (கௌரி) 0776326219 (மதன்)
0778682516 (அப்பன்) 0779262279 (மாலா)
0771672766 (ரூபன்) 0774446001 (நடராசா)

---

## மரண அறிவித்தல்

தோற்றம்
15
01
1945



மறைவு
31
08
2021

### பாலன் கணேசன்

கொடிகாமம் மந்துவிலைப் பிறப்பிடமாகவும், புங்கன்குளம் சந்தி அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பாலன் கணேசன் நேற்று (31.08.2021) செவ்வாய்க்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பிள்ளை பாலனின் அன்பு மகனும், காலஞ்சென்ற அரியகுட்டி சின்னம்மாவின் அன்பு மருமகனும், சிரோன்மணியின் பாசமிகு கணவரும், பாஸ்கரன் (கனடா), ஜீவாகரன் (கனடா), சுகந்தி (லண்டன்), காமினி (டோகாகட்டார்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யசோ (கனடா), அஜந்தா (கனடா), பாலகிருஷ்ணன் (லண்டன்), பிரகாஷ் (டோகாகட்டார்) ஆகியோரின் மாமனாரும், கிசோ, கிஷானி (கனடா), சிவைதி (லண்டன்), இனியாள் (டோகா கட்டார்) ஆகியோரின் பிரியமான பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31.08.2021) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சிந்துப்பாத்தி (அரியாலை) மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புங்கன்குளம் சந்தி,
அரியாலை.
077 251 2032

தகவல்:
மனைவி
கணேசன் சிரோன்மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாட்டில்...

கடந்த 25ஆம் திகதியிலிருந்து நேற்று மாலை வரையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பி.சி.ஆர். சோதனையில் 314 தொற்றாளர்களும், அன்டிஜென் சோதனையில் ஆயிரத்து 690 தொற்றாளர்களும் கண்டறியப்பட்டுள்ளனர். இவர்கள் குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் கண்டறியப்பட்டுள்ளனர்.
இதேவேளை கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் 36 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். இவர்களுடன் சேர்த்து 249 பேர் தொற்றால் குடாநாட்டில் இதுவரை உயிரிழந்துள்ளனர். (ஒ.5)

## ஊரடங்கு...

முடிவுகள் எடுக்கப்படும் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.
நாட்டை முடக்கமாட்டோம் என்று கூறிக்கொண்டிருந்த அரசு திடீரென ஊரடங்கை அறிவித்தது. அதேபோன்று ஊரடங்கை நீடிக்கமாட்டோம் என்று திரும்பத்திரும்ப தெரிவித்துவிட்டு திடீரென ஊரடங்கை நீடித்தது. இவ்வாறானதொரு நிலையிலேயே அமைச்சரவை இணைப் பேச்சாளர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் மெய்நிகர் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் நடைபெற்றது.
இதன்போது செப்ரெம்பர் 6 ஆம் திகதிக்கு பிறகும் நாட்டை மூடிவைக்க முடியாது என இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். சுகாதார அமைச்சரும் இதே போன்றதொரு கருத்தை வெளியிட்டுள்ளார். ஆனால் ஊரடங்கு நீடிக்கப்பட வேண்டும் என சுகாதார தரப்பினர் கோரிக்கை விடுக்கின்றனர். எனவே, இவ்விவகாரம் தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டதா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே,
ஊரடங்கை நீடிப்பதா அல்லது தளர்த்துவதா என்று அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவில்லை என அமைச்சர் குறிப்பிட்டார்.
அத்துடன், செப்ரெம்பர் 18ஆம் திகதி வரை ஊரடங்கை நீடித்தால் 7 ஆயிரத்து 500 உயிர்களையும், ஒக்ரோபர் 2 ஆம் திகதிவரை நீடித்தால் 10 ஆயிரம் உயிர்களையும் பாதுகாத்துக் கொள்ள முடியும் என உலக சுகாதார நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற காணொலி கலந்துரையாடலில் எமது நாட்டிலுள்ள மருத்துவ நிபுணர்கள் கருத்து வெளியிட்டிருந்தனர். இது தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன என எழுப்பப்பட்ட கேள்விக்கு, 'நாம் சகல சந்தர்ப்பங்களிலும் உலக சுகாதார நிறுவனம், மருத்துவ நிபுணர்கள் மற்றும் உள்நாட்டு சுகாதார தரப்பினரின் ஆலோசனைகளின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றோம். அரசு என்ற வகையில் சுகாதாரத் தரப்பினருக்கு ஒத்துழைப்பு வழங்கும் அதேவேளை மக்களின் பொருளாதார நிலைமை குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு அனைத்து விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டு உரிய முடிவு எடுக்கப்படும்- என்றார். (ஒ-44)

## ஒன்றரை...

இந்தச் சம்பவத்தில் பம்பைமடு பகுதியைச் சேர்ந்த சுயந்தன் கீர்த்திகன் என்ற பாலகனே சாவடைந்துள்ளான்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:
நேற்றுமுன்தினம் மாலை பாலகனின் தந்தையார் ஆட்டுக் கொட்டகையில் ஆடுகளைக் கட்டிக் கொண்டு நின்றுள்ளார். பாலகன் ஆட்டுக் கொட்டகை அருகில் விளையாடிக் கொண்டிருந்துள்ளான். இதன்போது ஆடு கொட்டகையின் சுவரை இடித்துள்ளது. இதனால் சுவர் இடிந்து விளையாடிக் கொண்டிருந்த பாலகன் மீது வீழ்ந்துள்ளது. இதனையடுத்து பாலகனை துரிதமாக மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோதும், அவன் முன்னரே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.
இந்தச் சம்பவத்தால் அந்தப் பகுதி சோகமயமாகியுள்ளது. (ஒ-18,110)

## கொரோனாத்...

கொரோனா நோயாளிகளின் உயிரைக் காப்பாற்றக்கூடிய இரண்டு மருந்துகளின் கலவையான ரீகன் கோவ் வழங்குவதற்கு உலகின் பல நாடுகள் ஒப்புதல் அளித்துள்ளன.
உயிருக்கு ஆபத்தான நோயாளிகளுக்கு 81 சதவீதம் ஆபத்தைக் குறைக்கிறது என்று சோதனைகள் காட்டுகின்றன. நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இந்த மருந்து பொருத்தமானது என்று கண்டறியப்பட்டுள்ளது.
அதன்படி, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் ஏற்கனவே கொவிட் நோயாளிகளுக்கு மருந்து வழங்க ஒப்புதல் அளித்துள்ளன. எனினும் இலங்கைக்கு மருந்தைக் கொண்டுவர தனியார் நிறுவனம் ஒப்புதல் அளித்திருந்தாலும், சில தடைகள் காரணமாக மருந்தை இறக்குமதி செய்ய முடியவில்லை என்பது தெரியவந்தது. இந்த மருந்தை அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டபோது பயன்படுத்தினார். ரீகன் கோவ் மருந்தைப் பற்றி பேசிய உலகின் முதல் நபர் அவராவார். சிக்கல்கள் இருந்தபோதிலும், டொனால்ட் டிரம்ப் அதிலிருந்து மீண்டபோதுதான் இப்படியொரு மருந்து இருப்பது வெளிப்படுத்தப்பட்டது. (ஒ-இ)

## கோத்தாவின்...

காரைநகர், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்ட இலங்கை போக்குவரத்துச் சபை சாலை முகாமையாளர்களுக்கும், வட மாகாண பொதுஜன பெரமுன தொழிற்சங்க இணைப்பாளர்களுக்கும் வடக்கு மாகாண இ.போ.ச பிராந்திய முகாமையாளர் செ.குணபாலசெல்வம் அறிவித்துள்ளார். எதிர்வரும் நவம்பர் மாதம் 18ஆம் திகதி ஜனாதிபதியின் பதவியேற்பு தினத்தையொட்டி வடக்கிலுள்ள ஒவ்வொரு சாலைகளும் ரூபா 50 ஆயிரம் பெறுமதியான புத்தர் சிலைகளை அருகில் உள்ள விகாரைகளுக்கு வழங்குவதற்கும், அதற்கான செலவுகளை அந்தந்த சாலை ஊழியர்சங்க உறுப்பினர்களே பொறுப்பேற்க வேண்டுமெனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## அரச....

தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது இது தொடர்பில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச விளக்கமளித்துள்ளார்.
இந்நிலையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது இது தொடர்பில் கேள்வி எழுப்பட்டது.
இதற்கு பதிலளித்த அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண கூறியதாவது,
தற்போதைய நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.
இதன்படி கடந்த வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட வேலைத்திட்டம் இன்னும் ஆரம்பிக்கப்படாமல் இருந்தால் அதற்கான நிதி இல்லையேல் திட்டத்தை மீளாய்வுக்கு உட்படுத்தி முடிவான்றை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.
இரண்டாவதாக அத்தியாவசியமற்ற ஆள்சேர்ப்புகளை நிறுத்துமாறு நிதி அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது.
அமைச்சுகள் மற்றும் அரச திணைக்களங்களின் பணியாளர் குழாமுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளில், அவசியமற்ற கொடுப்பனவுகளை நிறுத்துதல். உதாரணமாக தற்போது ஊரடங்கு நடைமுறையில் உள்ளது. எனவே, எரிபொருள் கொடுப்பனவு உள்ளிட்ட விடயங்கள் குறித்து கவனம் செலுத்துவதற்கும், உரிய வகையில் நிதியை முகாமை செய்வதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டது. என்றார். (ஒ-44)'

## 100 வயது...

மாவட்டத்தில் நேற்றைய தினம் 299 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற சங்கானையைச் சேர்ந்த 74 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட வரணியில் 98 வயதுடைய பெண் ஒருவர் வீட்டில் உயிழந்துள்ளார். அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கட்டுவளை சேர்ந்த 81 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.
வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 100 வயதுடைய ஆண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் சடலம் மந்திகை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜென் சோதனையில் தொற்றுள்ளமை கண்டறிப்பட்டது.
அல்வாய் மேற்கு திக்கத்தைச் சேர்ந்த 47 வயதுடைய பெண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் தொற்றுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நெல்லியடியைச் சேர்ந்த 81 வயது பெண் ஒருவர் நேற்று உயிரிழந்தார். அவருக்கு முன்னெடுக்கப்பட்ட சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 249ஆக உயர்வடைந்துள்ளது. (ஒ-26)

## நாட்டில்...

யுள்ளமை மிகப்பெரிய ஆபத்தான நிலையாகும். இதனை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.
இலங்கை தற்போது கொரோனாப் பெருந்தொற்றுக்கு உள்ளாகி இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவசரகால நிலைமையை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பிரகடனப்படுத்தியுள்ளார். இதையடுத்து அத்தியாவசிய சேவைகள் பற்றிய பல விதிமுறைகளை பிரகடனப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் ஜனாதிபதியின் கைகளுக்கு வந்துள்ளது.
இந்த அவசரகால நிலை பிரகடனம் ஒரு மாதத்துக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகரிக்கப்பட வேண்டும். அதன்படி அடுத்த வாரத்தில் நாடாளுமன்றம் கூடும்போது இந்த அவசரகால நிலைமை பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும் எனத் தெரிகின்றது. தேவைப்படின் மாதத்துக்கு ஒரு தடவை இத்தகைய பிரேரணை மூலம் அவசரகால நிலைமை நீடிக்கப்படும்.
இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியாகியுள்ளது. இந்த நிலையில் இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்ததாவது,
இந்த அவசரகால நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்தி ஜனாதிபதி தான் விரும்பும் சட்டங்களை மற்றும் விதிமுறைகளை வகுக்க முடியும். சட்டம் இயற்றும் அதிகாரமும் ஜனாதிபதியின் கைகளுக்குச் சென்றடையும்.
திங்கள் நள்ளிரவில் இருந்து அவசரகால நிலைமை நாடு பூராகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் உணவு விநியோகத்தை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்துவதற்காக இது செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஆனால், நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து இருந்தால் அதனுடன் தொடர்புபட்ட விடயங்களுக்கு மட்டுமே இந்தச் சட்டத்தை பயன்படுத்த முடியும். இதனால்தான் பொதுச் சுகாதார நிலைமைகளுக்கான ஒரு சட்டம் இயற்றப்படவேண்டும் என தொடர்ச்சியாக நாம் அறிவுறுத்தி வருகின்றோம்.
இதன் ஆபத்து என்னவென்றால் இதனைத் தொடர்ந்து முற்றுமுழுதாக ஜனாதிபதி ஆட்சியே நடக்கும். ஜனாதிபதி தான் விரும்பும் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை வகுக்க முடியும். சட்டம் இயற்றும் அதிகாரமும் ஜனாதிபதி கைகளுக்குச் சென்றடையும். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்- என்று கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (ஒ-22)

## கடலுக்குச்...

மாத்திரம் மீட்கப்பட்டுள்ளது.
இதேவேளை அதேபகுதியைச் சேர்ந்த வேறொருவர் கடற்றொழிலுக்குச் சென்றிருந்த நிலையில், இந்திய இழுவைப் படகு மோதியதால் படகு சேதமடைந்த நிலையில் கரையொதுங்கியுள்ளார்.
இதேவேளை காணாமல்போன மீனவர்கள் இருவரையும் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஒ- 26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழுவதுமாக வெளியேறியது அமெ.
# கொண்டாட்ட மழையில் தலிபான்!

காபூல், செப். 1

**சுமார் 20 ஆண்டுகள் ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டிருந்த அமெரிக்கப் படைகள் நேற்றுமுன்தினம் பின்னிரவுடன் அங்கிருந்து புறப்பட்டன. அமெரிக்காவின் இறுதி இராணுவச் சிப்பாய்களுடன் அமெரிக்க இராணுவம் வானெழும்பியதும் காபூல் விமான நிலையத்தைச் சுற்றிப் பாதுகாப்புக் கடமையில் இருந்த தலிபான்கள் மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்து வேட்டுக்களைத் தீர்த்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.**





அமெரிக்காவுக்கும் தலிபான்களுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின்படி நேற்றையதினம் பின்னிரவுக்குள் அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற வேண்டும். இதனால் கடந்த மூன்று நாள்களாகவே அமெரிக்கா தனது இறுதிக்கட்டப் படைகளை ஆப்கானிஸ்தானில் இருந்து திரும்பப் பெறும் முயற்சிகளைச் செய்து கொண்டிருந்தது. அமெரிக்கப் படைகளுடன் அந்த நாட்டு இறுதி இராணுவ விமானம் நேற்றுப் பின்னிரவு ஆப்கானிஸ்தானை விட்டுப் பறக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அதற்கு சில மணிநேரங்களுக்கு முன்னதாகவே அமெரிக்கப் படைகள் முற்றாக வெளியேற்றப்பட்டன. பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இறுதிக்கட்டத்தில் இந்த நேரமாற்றங்கள் செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் இறுதி இராணுவ விமானம் தனது பறப்பை ஆரம்பித்ததுடன், காபூல் விமான நிலையத்தைச்சுற்றிப் பாதுகாப்பில் ஈடுபட்ட தலிபான்கள் மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்து தமது ஆரவாரத்தை வெளிப்படுத்தினர். சிலர் துப்பாக்கிகளால் வான் நோக்கிச் சுட்டுத் தள்ளினர். அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்ட பின்னர், அந்தத் தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்ட பின்லேடனுக்கு தலிபான்கள் அடைக்கலம் கொடுக்கின்றனர் என்று தெரிவித்த அமெரிக்கா, 2001ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தான் மீது போர் தொடுத்தது. தலிபான்களை ஆட்சியில் இருந்து அகற்றிவிட்டு தேர்தலை நடத்தி ஜனநாயக ஆட்சியை அறிவித்தது.

எனினும் கடந்த 20 ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் முகாமிட்டிருந்தாலும் தலிபான்களை முற்றாக அழிக்க முடியவில்லை. இதனால் ஆப்கானிஸ்தானில் இருந்து முற்றாக வெளியேறும் முடிவை ட்ரம்பின் ஆட்சிக்காலத்தில் அமெரிக்கா எடுத்தது. அதன் தொடச்சியாக நேற்றுமுன்தினம் பின்னிரவு அமெரிக்கப் படைகள் முற்றாக வெளியேறின. (ம)

## ஆப்கானிஸ்தானுக்கு சுதந்திரம் கிடைத்தது

*தலிபான்கள் அறிவிப்பு*

காபூல், செப். 1

காபூலில் இருந்து அமெரிக்காவின் இறுதி இராணுவ விமானம் வெளியேறியதை அடுத்து, 'ஆப்கானிஸ்தானுக்கு முழுமையான சுதந்திரம் கிடைத்தது' என்று தலிபான்கள் அறிவித்தனர்.

தலிபான்களின் செய்தித்தொடர்பாளர் இது தொடர்பில் தெரிவிக்கையில், 'ஆப்கானிஸ்தான் காபூலிலிருந்து அமெரிக்கப் படைகள் முழுமையாக வெளியேறிவிட்டன. ஆப்கானுக்கு முழுமையான சுதந்திரம் கிடைத்துவிட்டது' என்றார். காபூல் சர்வதேச விமானநிலையத்தில் இருந்த தலிபான் ஆயுததாரி ஹேமந்த் ஷெர்சாத் கூறுகையில் 'காபூலில் இருந்து அமெரிக்காவின் கடைசி 5 விமானங்களும் வெளியேறிவிட்டன. என்னுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்த வார்த்தைகள் இல்லை. 20 ஆண்டுகள் தியாகத்துக்குப் பயன் கிடைத்துவிட்டது' என்றார். (ம)

## ஆப்கானிஸ்தான் மக்களை அன்புடன் உபசரியுங்கள்!

**உலக நாடுகளிடம் பைடன் கோரிக்கை**

வொஷிங்டன், செப். 1

ஆப்கானிஸ்தானில் இருந்து தஞ்சமடைந்த, தஞ்சமடையப் போகின்ற அனைத்து மக்களையும் உலக நாடுகள் அன்புடன் வரவேற்க வேண்டும், உபசரிக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் பைடன் வேண்டுகோள் விடுத்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் உச்சக்கட்டப் பாதுகாப்புடன் வெளியேற்றப்பட்டுள்ளன. ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேற விரும்பிய மக்களும் வெளியேற்றப்பட்டுள்ளனர். ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறிய, இனிவரும் காலங்களில் வெளியேறி உலக நாடுகளில் தஞ்சமடையப்போகின்ற மக்களை அனைத்து நாடுகளும் அன்புரிமையுடன் உபசரிக்க வேண்டும் என்றார். (ம)



**German, Holland (Netherland) Swiss, Ostria**

நாடுகளுக்கான மொழிவகுப்புகள் German Embassy யின் A1 Certificate க்கு ஏற்றவாறு நடைபெறுகிறது.

தொடர்புகளுக்கு: **Mrs.P.Kajenthini**

**T.P: 077 160 4823**

**Jaffna.**

**காணி விற்பனைக்குண்டு**

நீர்வேலி தெற்கு கரந்தன் பகுதியில் 11 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நிலப்பரப்பு 1 1/2 பரப் பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் .14 அடி பாதையுடன் கரந்தன் சந்தியில் இருந்து 200 M தூரம்.

பார்வையிடும் நேரம் : காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை. (தரகர் தேவையில்லை)

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 814 7389, 077 614 7333**

**31ஆம் நாள் நினைவஞ்சலி**



தோற்றம்
23.12.1957

மறைவு
02.08.2021

**அமரர் சித்திரா ரவிச்சந்திரன் (ரூபி)**
கொக்குவில் கிழக்கு

நாட்கள் முப்பத்தொன்று சென்றிடினும்
மறைந்திடுமோ உம் நினைவு
பரிதவிக்குதம்மா எம் நெஞ்சம்
உம் புன்சிரிப்பைக் காண
விழியோரக் கண்ணீருடன்
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

K.K.S வீதி, இணுவில் மேற்கு. குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01. 09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.